நவராத்ரி தேவியர் துதித் திரட்டு

வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை, சென்னை - 1.


ஸ்ரீ மாதா திரிபுர சுந்தரி
LAKSHMI
VANI
BRAMHA
MADHU SUDHANA
SANKARA
RUDHRA
SRI CHAKRAYADRA
A9089

உ
ஸ்ரீ காளிகாம்பாள் துணை



அம்பாள் ஆசீர்வாதம்

இந்நூல்
சென்னை ஸ்ரீகாளிகாம்பாள் கோயில் முன்னாள் பேராசான்
சிவாசார்யகுல பூஷணம்,
சக்தி கருணாகர சக்ரவர்த்தி, சிவாகமப்பிரதிஷ்டா பூஷணம்,
ஸ்வர்கஸ்ரீ சிவஸ்ரீ. டாக்டர். தி.ஷ. **ஸாம்ப மூர்த்தி சிவாசார்யர்**
அவர்களுக்கு

★ **ஸமர்ப்பணம்** ★

[illegible]

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

NAVARATRI DEVI STUTI

நவராத்திரி தேவியர் துதித் திரட்டு

வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை

சென்னை - 1

தொகுப்பாசிரியர்
ஆகமப்பிரவீணர். வியாகரணசிரோமணி,
சிவாகம அருட்செல்வர். சைவாகமக்ஞ சூடாமணி,
சிவஸ்ரீ.வி. சோம சேகர சிவாசாரியர் M.A.
(சைவாகமப் பேராசிரியர் & முதல்வர்)
சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை - 1

மூன்றாமாண்டு வார்ஷிக நவதின காளீஜயந்தி உத்ஸவமாக 10 நாட்களில் தசமகாவித்யா சக்திகளின் பூஜை மற்றும் பிரத்தியங்கிராஸ்திர லக்ஷ ஆகுதிகளுடன் நடைபெற்ற ஸ்ரீ மாகாளீ பிரத்யங்கிரா மாத்ரு சாந்தி மஹாயாகத்தில் நவம்பர் 2008ல் வெளியிடப்பட்டது.

முதல் பதிப்பு
அக்டோபர் - 2008

தர்ம பிரசார விலை
ரூபாய் 50.00

அச்சிட்டோர் :
சௌம்யா ஆப்செட் பிரிண்ட்ஸ்,
இராயப்பேட்டை, சென்னை - 14, ✆ : 044-28482948

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர் :- நவராத்ரி தேவியர் துதித்திரட்டு
நூலின் மொழி :- தமிழ் மற்றும் சமஸ்கிருதம்
நூலின் எழுத்து :- தமிழ் எழுத்து மட்டில்
நூலின் அளவு :- 13 cm X 18 cm
அச்சிட்டுள்ள பரப்பளவு :- 11 cm x 16 cm
நூலின் எண்ணிக்கை :- 2500
வெளியீட்டு வரிசை எண் :- 3
நூலின் பதிப்பு எண் :- முதல் பதிப்பு
தொகுப்பு ஆசிரியர் & வடிவமைப்பு :- வி. சோம சேகர சிவாசார்யர்.
நூல் உரிமை : சிவஶ்ரீ. T.S. காளிதாஸ் சிவாசார்யர்.
வெளியீட்டு நாள் :- நவம்பர் 2008.
நூலின் பக்கங்கள் :- -----
அச்சிட்டோர் :- சௌமியா ஆப்ஸெட் பிரிண்டர்ஸ், சென்னை - 14.
கணினிப் பதிவு அச்சகம் :- ராஜம்ஸ் டிஜிட்டல், சென்னை - 14.
வெளியீடு :- மேதா சக்ரிணீ கோஷ்டம்
தொகுத்த நிறுவனம் :- சிவாசார்யர் அறக்கட்டளை.
வெளியிடுவோர் :- சிவஶ்ரீ. தி.ஸா. சுவாமி ஸதாசிவோம் சிவாசார்யர்.
சிவஶ்ரீ. தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர்.
சிவஶ்ரீ. தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்.
கிடைக்குமிடம் :- சைவாகம கலாசார வித்யாகேந்திரம்.
2வது மாடி. நெ. 207. தம்பு செட்டித் தெரு.
சென்னை - 600 001.
தர்ம பிரசார விலை :- ஐம்பது ரூபாய்

நூலின்பொருளடக்கம்

வரிசை எண்	பொருள்கள்	பக்கம்
	தமிழ் கட்டுரைப்பகுதி – அ	
1.	நவராத்ரி விரத மஹிமை விளக்கம்	1
	ஸமஸ்கிருத ஸ்துதிப் பகுதி – ஆ	
2.	பாதுகாப்பு தரும் ஸ்ரீதுர்கா கவசம்	16
3.	ஸ்ரீ துர்கா ஸப்தசுலோகீ	17
4.	மஹாலக்ஷ்மீ அஷ்டகம்	18
5.	அஷ்டலக்ஷ்மீ ரூப தியானாவளீ	20
6.	அஷ்டலக்ஷ்மீ ஸ்தோத்திரம்	23
8.	ஸரஸ்வதீ ரூபதியானதவளீ	27
9	ஸ்ரீ சாரதாம்பா ஸ்தோத்திரம்	29
10..	ஸரஸ்வதீ வர பிரார்தனா விதி	30
11.	தச மஹாமாத்ரு தியான ஸ்துதி	31
12.	தச மஹா மாதர ஸ்தவம்	33
13.	மாத்ரு தேவீ ஸ்தவ ரத்னாவளீ	35
	செந்தமிழ் துதிப் பகுதி – இ	
14.	அபிராமி அந்தாதி துதிப்பத்து	42
15.	அபிராமி அம்மைப் பதிகங்கள்	44
16.	ஸ்ரீ புவனேஸ்வரி துதி அஷ்டகம்	58
17.	ஸ்ரீ காமாக்ஷீ துதி அஷ்டகம்	60
18.	ஸ்ரீ ஜயதுர்கா துதி அஷ்டகம்	62
19.	திருமகள் அருட்பா	64
20.	ஸகலகலா வல்லி மாலை	66
21.	ஸ்ரீ அதர்வன பத்ரகாளி திருவருள்மாலை	68
22.	திருமுறைத்துதித் திரட்டு	70
23.	சிவசக்தி துதித் திரட்டு	73
24.	மாதேவியர் அருட்பாக்கள்	80
25.	வாழ்த்துப்பாக்கள்	96

சுபம்


ஸ்ரீ காமாக்ஷி அம்மன்



உ

ஸ்ரீ குருப்யோ நம:

முகவுரை

"லக்ஷ்மீ பிரதான ஸமயே நவ வித்ருமாபாம்

வித்யா பிரதான ஸமயே சரதிந்து சுப்ராம் ।
வித்வேஷிவர்க விஜயேபி தமால நீலாம்

தேவீம் திரிலோக ஜனனீம் சரணம் பிரபத்யே||

கலைமகள், மலைமகள், அலைமகள் ஆகிய முப்பெருந் தேவியரின் பேரருளை நாம் பெற உதவிடும் நன்நாளாம், நவராத்ரி புண்ய கால சுபதினத்தில், தேவியின் துதிப்பாடல்களின் தொகுப்பு நூல் வெளிவருவது மகிழ்ச்சிதரவல்லது. இதில் மூவுலகும் மோகித்து ஒடுங்கும் பேரழகியாம் ஸ்ரீதிரிபுரசுந்தரி அபிராமி அம்மையின் பதிகங்களும், துர்கையின் ஸப்த சுலோகியும், அஷ்ட லஷ்மிகளின் துதிகளும், நாமகளின் ஸகல கலாவல்லி மாலையும், நவராத்ரி மஹிமை கூறும் கட்டுரையும், இடம் பெற்று உள்ளது. லலிதா சஹஸ்ரநாமத்தில் அம்பிகைக்கு "அஷ்டமூர்த்தி" என்று ஒரு நாமா உண்டு, இது பிராம்மீ முதலிய எட்டு தாய்மார்களை, லஷ்மியுடன் கூடிய சப்த மாதர்களை அதாவது எட்டு லோக மாதர்களைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். ஸரஸ்வதியின் வசினீ முதலிய எட்டு வாக் சக்திகளையும் கொள்ளலாம்.

"மாயாம்து பிரகிருதம் வித்யாம் மாயினம்து மகேஸ்வரம்"

என்பது சுருதியாம். உலகில் நடைபெறும் யாவும் தேவியின் செயலேயாம். இதனை "மஹாமாயா பிரபாவேந ஸம்ஸாரஸ்திதி காரிணா" என்கிற தேவீ மகாத்மிய வசனத்தால் தேவியின் மஹிமையே என உணரலாம்.

சண்டிகை எனும் பராசக்தியே பரப்ரம்ஹம். பரமசிவத்தின் பட்ட மஹிஷி இவளே.

"பூஜயேத் ஜகதாம் தாத்ரீம் சண்டிகாம் பக்தவத்ஸலாம்"

பக்தர்களிடத்தில் தாயாய் பாசம் கொண்ட மூவுலக நாயகியை பூசிக்க வேண்டும் என்றும், சண்டியை பூசிக்காவிடில் புண்யங்கள் யாவும் வீணாகிவிடும். தாயை வணங்காது செய்வது பயன் தராது எனும் கருத்தை தேவீ மாஹாத்மிய ரஹஸ்ய வசனம் கூறுகிறது. ஆகையால் சண்டியை பூசித்திட வலியுறுத்துகிறது.

"யோ ந பூஜயதே நித்யம் சண்டிகாம் பக்த வத்ஸலாம் ।
பஸ்மீ கிருதாஸ்ய புண்யாநி நிர்தஹேத் பரமேச்வரீ ||
தஸ்மாத் பூஜய பூபால ஸர்வலோக மஹேச்வரீம்"

என்கிறது தேவீ மாகாத்ம்ய ரஹஸ்ய நூல். எனவே சிவசக்தியாகிய சாமுண்டீஸ்வரியை வழிபட வேண்டும் என அறியலாம். சிவசக்தியை பிரிக்க இயலாது. இவளே துர்கா. நவராத்ரியில் இவளை வழிபடுவதே விரும்பியதைத் தரவல்லது. நவசக்திகள பலவாறு கூறப்படும்: வாமாதி சக்திகள் ஒன்பது. நவதுர்கைகள் சைலபுத்ரீ முதலாக பல வகைப்படும். நவகாளிகள், நவதூதிகள் இவர்களை வழிபடுதலே ஒன்பது நாட்களான "நவராத்ரி" காலமாகும். அறிவு படைத்த மக்கள் எல்லா ஜீவ ராசிகளிடத்திலும் அன்போடும் அருளோடும் வாழ வேண்டும். இதற்கு தியாகமும், வீரமும் அவசியம். அசுரத் தன்மைகளை அழித்து. அன்பு, ஒழுக்கம், வாய்மை, ஈகை முதலிய நற்பண்புகளை வளர்க்க வேண்டும். இதற்கு நவராத்ரியில் தேவீ வழிபாடு அவசியம் செய்யத்தக்கது. உலக வாழ்க்கைக்குப் பொருள் அவசியம், அறிவு அவசியம், ஆரோக்கியம் அவசியம். எனவே மூவகையான இவற்றைப் பெற லஷ்மி, ஸரஸ்வதி, துர்கா எனும் இவர்களை வழிபட வேண்டும். தினமும் "துர்கா சப்த சுலோகீ" எனும் ஏழு சுலோகங்களைக் கூறி துர்கையை வழிபட

இஷ்டசித்தி ஏற்படும். தேவியின் விரத பூஜா காலங்களில், எந்த சக்தியானாலும் ஒன்றான பராசக்தி - தேவியைத் துதித்து அருள் பெற, இந்நூல் பெரிதும் பக்தர்களுக்கு உதவும் என்பதில் ஐயம் வேண்டாம். இது மிகச்சிறிய நூலானாலும் ரத்தினச் சுருக்கமாகவும், தினமும் கடைபிடித்திடவும், பாராயணம் செய்திடவும் ஏற்ற வகையில் அமைந்துள்ளது . அறிய சில துதிகள் அழகாக தமிழ் எழுத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருத மொழி துதிகளும் தமிழில் அச்சிட்டிருப்பது தமிழ் மட்டுமறிந்த பலருக்கும் பெரும் பயன்தரவல்லது. இதனால் பதிப்பித்தோரின் பொதுநல சிறந்த நோக்கம் பாராட்டிற்கு உரியது. இதுபோன்ற பல நூல்களை தொடர்ந்து வெளியிட்டு உதவ இருக்கிறார்கள் என்பது பாராட்டத்தக்கது.

"தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக" எனும் தி.ஷ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யரின் பாகவதர்கள்பால் இருந்த காருண்ய வடிவான திருவுள்ளமே இந்த நூல் வடிவமாக அவரது குமாரர்களால் வெளிவருகிறது . எனவே சிவாசார்யரின் குமாரர்கள் ஆரோக்கியத்துடன் நீடுழி வாழ்ந்து உலக மக்களுக்கு மேன்மேலும் நன்மை பயக்கும் இது போன்ற நன்நெறிச் சிவப்பணியைச் செய்ய எல்லாம் வல்ல இறைவனை திரிகரண சுத்தியுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்
சிவாகமப் பேராசிரியர்
ஆகமப் பிரவீணர்.வியாகரண சிரோமணி.
சிவஸ்ரீ. V. சோமசேகர சிவாசார்யர்.
அறக்கட்டளை ஆலோசகர்.
சென்னை - 600 001.

சுபம்

ஸ்ரீ அன்னபூரணி
A 0130

உ

PRATYANGIRAA DEVI

ஸ்ரீ குருப்யோ நம :

பதிப்புரை

சோணப்ரபம் ஸோமகலா வதம்ஸம்
பாணிஸ்புரத் பஞ்ச சரேசஷுசாபம் |
பிராணபிரியம் நெளமி பிநாக பாணேர்
கோணத்ரயஸ்தம் குலதைவதம் நஹ ||

இறைமணம் கமழும் இனிய மொழியாம் தமிழ்மொழி. இதன் கண் தோன்றிய சமய நூல்கள் பல . அவற்றைச் சாத்திரம், தோத்திரம், புராணம் என மூவகைப்படுத்துவர். இம்மூவகை நூல்களுக்குள்ளும் தோத்திர நூல்களே மிகுதியாகவுள்ளன. அவை பல கடவுளரைப் பற்றியவையாகும். அவற்றுள் இந்நூல், உமையம்மை, சரஸ்வதி, துர்கா, லஷ்மி, இவர்களின் துதிகளுடனும் நவராத்ரி புண்ய விரத கால வழிபாட்டு மஹிமை பற்றிய கட்டுரையுடனும் கூடியதாய் விளங்குகிறது.

" சொல்லும் பொருளும் என நடமாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க்கே யழியாவரசும்
செல்லுந் தவநெறியுஞ் சிவலோகமுஞ் சித்திக்குமே"

அபிராமியம்மையைப் பற்றி இரு பதிகங்கள் உள்ளன.

நூலாசிரியரான அபிராமிபட்டர் அம்மையின் திருவுருவினைக் கேசாதிபாதமாக நினைத்து உளம் கொள்கிறார். அம்மையின் திருப்பெயர்கள் பலவற்றையும் எண்ணி மகிழ்கின்றார். அம்மையின் பெருங்கருணையை வியந்தும், நயந்தும் கூறி அருளும் ஆசிரியர், தம்மை நன்நெறிக்கண் செலுத்திச் சர்வ காலமும் தம்மை காத்தருளுமாறு வேண்டியிருப்பது நாமும், அம்மையிடத்து வேண்டிப் பெறத் தக்கதொன்றதாகும் . "கலையாத கல்வியும்" "சகல செல்வங்களும் தரும்" எனத் தொடங்கும் இரு பாடல்களும் அம்மையிடத்து வேண்டி பெறும் பேறுகளாக அமைந்தவை. இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்தடையாதவாறு காத்தருளும் அம்மையின் அருட்பதிகங்கள் இரண்டும் நாமும் பாராயணம் செய்யத் தக்கவையாகும். இறைவியாகிய பராசக்தியானவள் உயிர்க்குச் செல்வம், வீரம், கல்வி ஆகிய முப்பேறுகளையும் வழங்க, முறையே திருமகளாகவும், வெற்றித் திருமகளாகவும், கலைமகளாகவும் இருந்தருளும் சமயமே நவராத்ரியாகும். அத்தகைய நன்நாளில் தேவியின் புகழ்பாடும் துதி நூலாகிய இந்நூல் வெளியிட்டருளும் பாங்கு எண்ணி மகிழ்தற்கு உரியதொன்றாகும் .

சரஸ்வதி பூஜையை முன்னிட்டு ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் இயற்றிய ஸகலகலாவல்லி மாலை இதில் அடங்கியுள்ளதும், சரஸ்வதியின் அறிய 12 நாமங்களின் துதி இடம் பெற்று உள்ளதும், சாலப்பொருத்தமாகும். மேலும், நவராத்ரி விரத நாளை நிச்சயித்திடும் முறை, விரத கால வழிபாட்டு முறைகள் தேவீ பூஜையின் மஹிமை, வழிபாட்டின் அவசியம், துர்கா, லஷ்மி, சரஸ்வதி ஆகிய பெயர்ச் சொல், பொருள், விளக்கம், விரதிக்கு தேவையான நியமங்கள், ஒன்பது தின வழிபாட்டிற்கான காரணம், சரஸ்வதி புத்தக பூஜை மஹிமை மற்றும் ஆயுத பூஜையின் மஹிமை, இவற்றிற்கான காரணம் மற்றும் முறை, சமீ விருக்ஷ(வன்னி மரத்தின்) பூஜை முறை மற்றும் பயன்கள் வித்யாரம்ப விதிமுறை இவற்றை திரு. சோமசேகர

சிவாசார்யர் அவர்கள் நவராத்ரி மஹிமை விளக்கம் எனத் தொகுத்தளித்த கட்டுரையையும் இணைத்து, பொதுமக்கள் அறிந்து நவராத்ரி விரதம் மேற்கொள்ளவும், தேவியைத் துதித்து அருள்பெற உதவும் துதிப்பாடல்-களையும் சேர்த்துத் தொகுத்து இந்நூலில் பதித்து உள்ளோம்.

இத்தகைய அரிய பேறுகள் அனைத்தையும் அன்பர்கள் அனைவரும் பெற வேண்டும் என்ற பெருங்கருணையினால் சென்னை-1 ஸ்ரீகாளிகாம்பாள் கோவில் ஆசார்யர் "சக்தி கருணாகர சக்ரவர்த்தி" சிவத்திரு, டாக்டர். தி.ஷ. ஸாம்ப மூர்த்தி சிவாசார்யரின் திருவுளப்பாங்கின் வண்ணம் அவர்களது குமாரர்களாகிய நாங்கள் அறக்கட்டளை வாயிலாக வெளியிட்டுள்ளோம் . அன்பர்கள் காளீயம்மையின் அருள் பெற இவ்வருள் நூலை நாளும் பாராயணம் செய்து எல்லா நலன்களையும் பெறுவார்களாகுக. 2008 - இவ்வாண்டின் சாரதா நவராத்ரி மலராக வெளிவரும் இத்துதி நூல் மலர் மாலையாக்கி எம் அன்னை ஸ்ரீகாளிகாம்பாள் திருவடியில் சமர்பித்து உளம் மகிழ்கிறோம் .

இத்தகைய புண்ணிய பேறுகள் பலவற்றிலும் அடியவனை ஈடுபடுத்த ஆட்கொண்டு அருளுகின்ற எனது ஆசார்ய சுவாமிகளின் திருவடி மலர்களைப் பன்முறையும் வணங்கி நன்றி பாராட்டிடும் கடப்பாடுடையேன். இந்நூல் வெளிவருவதற்குத் துணையாக இருந்த ஆசிரியர்க்கும் மற்றும் நன்கு அச்சிட்டுதவிய அன்பர்களுக்கும் நன்றி செலுத்துகின்றேன்

இங்ஙனம்

சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ சிவாசார்யர்
சிவாசார்யர் டிரஸ்ட்
சென்னை-600 001.

சுபம்



உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

அணிந்துரை

யா தேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம: ||

உலகெலாம் நிறைந்து யாவுமாகி நின்று, எல்லோரையும் ஆட்டிவைக்கும் அந்த சக்தியே, "பராசக்தி." பிரும்மாவின் படைக்கும் சக்தி, விஷ்ணுவின் பரிபாலன சக்தி, ருத்திரனின் ஸம்ஹார சக்தி, சூரியனின் பிரகாசிக்கும் சக்தி, அக்னியின் தகிக்கும் சக்தி, வாயுவின் வீசும் சக்தி, பூமியின் சுமக்கும் சக்தி, இவை எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாக ஒரு சக்தியுண்டு. அவளே பராசக்தி. எல்லாம் அவளது செயலே ஆகும். இவள் இல்லையேல் சிவனும் சவமாவார். புழு முதலாக பிரும்மா வரையில் ஒரு காரியத்தையும் செய்ய முடியாதபோது, தனக்கு சக்தியில்லை என்றே கூறுவர்.

எங்குமுள்ள அந்த சக்தியே "பிரம்மம்" எனப்படுகிறது. அவளே ஆபிரும்மகீடஜனனியாக; மும்மூர்த்திகளிடம் சக்தியாக விளங்குபவள். பற்பல பிரம்மாண்டங்களைப் படைத்து தனக்குள் ஒடுக்குபவள். அம்பிகை அருள் இல்லாதவர்கள் சக்தி அற்றவர்களாக இருப்பதைக் கண்கூடாக நாம் காணலாம். எனவே அம்பிகையை குறித்து, பிரும்மா முதலானோர் செய்த அறிய துதிகளை, நாமும் பாராயணம் செய்தால், உலகில் ஏற்படும் கஷ்டங்களையும், தொல்லைகளையும், நீக்கி இன்பம் பெறலாம் அவளை அன்றி வேறு எந்த தெய்வத்தையும் நம்பி பிரயோசனமில்லை.

அணிந்துரை

"நவதுர்காம் மஹாகாளீம் பிரும்ம விஷ்ணு சிவாத்மிகாம் |
திரிகாலஞான ஸம்பன்னாம் நமாமி புவனேஸ்வரீம்"||

ஸ்ரீமாதாவாகிய அந்த அம்பிகையே, அக்கிரமங்களை ஒழிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும், துர்கா தேவியாக விளங்குகிறாள். கலியுகத்தின் ஸ்ரீசண்டிகாபரமேஸ்வரீயே. பக்தர்களின் துயரங்களை அறவே துடைத்து, அவர்களைக் காத்து ரக்ஷிப்பவள், துர்காதேவீ ஒருவளே. துஷ்டர்களையும் பகைவர்களையும் அழித்து சிஷ்டர்களைக்காப்பதொன்றையே தனது தொழிலாகக் கொண்டுள்ளவள் அன்னை ஸ்ரீதுர்காதேவீ. இவளே லக்ஷ்மியாயும், வாணியாயும், விளங்கி அருள்பவள். இவளை ஆண்டுதோறும் வரும் சாரதா நவராத்திரியில் துதித்து வழிபடுவதால் இஸ்டஸித்திபெறலாம். ஆதலால் நவராத்திரியில் சண்டிஹோமத்தின் போது வெளிவரும் இந்த "தேவீதுதித்திரட்டு" நூல், பக்தர்களுக்கு பெரிதும் உதவும் என்பதால், பொருத்தமான போற்றுதற்கு உரிய அறநெறிச்செயலாம். இதில் சமஸ்கிருத மொழித்துதிகள், தமிழ் எழுத்தில் எளிதில் கூறும் வகையில் சிறப்புற அச்சிட்டிருப்பதும் பாராட்டத்தக்கது. ஸ்ரீதுர்கையின் ஸப்தசுலோகீ துதியை தினமும் பாராயணம் செய்தது யாவரும் சுலபமாக தேவியின் அருளைப்பெற இந்நூல் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீசிவசக்தி ஐக்ய ரூபிணியாண ஸ்ரீசண்டிகாபரமேஸ்வரியை உபாஸிக்கும் பக்தர்களுக்கு அருள்பெற உதவும் வகையில் பெருநோக்கோடு இதனை வெளியிடும் சிவத்திரு.டாக்டர். தி.ஷ சாம்பமூர்த்திசிவசார்யரின் திருக்குமாரர்களின் அருந்தொண்டைப்பாராட்டியும் இத்துதிநூலை யாவர்க்கும் பயனளித்திட உளமார வாழ்த்தியும், ஸ்ரீஉன்னாமுலை உடனுறை அண்ணாமலையார் கழலடியினையும் ஸ்ரீ காளிகாம்பாள் சரணத்தையும் இறைஞ்சி, அருளாசியை வழங்கியும், உளமார பாராட்டி மகிழ்கிறேன்.

இங்ஙனம்
சிவஸ்ரீ தி.ஷ. வாகீச சிவாசாரியர்.
ஸ்ரீ காளிகாம்பாள் கோயில் ஆசார்யர்.
மண்ணடி, சென்னை -600 001.

சுபம்


ஸ்ரீ துர்காம்பா
JJ 636

உ
ஸ்ரீ காளிகாம்பாள் துணை

நவராத்ரி விரத மஹிமை விளக்கம்

இறைவணக்கம்

மாணிக்க வீணாமுபலாலயந்தீம்|
மதாலஸாம் மஞ்சுள வாக்விலாஸாம்||
மாஹேந்திர நீலத்யுதி கோமளாங்கீம் |
மாதங்க கன்யாம் மனஸா ஸ்மராமி||
மாதா மரகத சியாமா மாதங்கீ மத சாலினீ|
கடாக்ஷயது கல்யாணீ கதம்ப வநவாஸினீ||
நமோதேவ்யை மஹாதேவ்யை சிவாயை ஸததம்நம:|
நமப் பிரகிருத்யை பத்ராயை நியதா : பிரணதாஸ்ம தாம்||

* * *

அனைத்து உலகநாயகியும் அன்னையுமாகிய ஆதிபராசக்தியை வழிபட உகந்த புண்ணிய நாட்கள் ஒன்பதும் நவராத்ரி ஆகும். இவற்றில் துர்கை, லக்ஷ்மி, சரஸ்வதி எனும் முப்பெருந்தேவியர்களை முறையே மூன்று மூன்று தினங்களில் சிறப்பாக பூஜித்திடுவர். சைவாகம நூல்கள் நவராத்திரி கால விசேஷ தேவீ பூஜை முறைகளை விளக்கியுள்ளது. இந்த ஒன்பது நாட்களிலும் விசேஷமாக விரதம், பூசை, உத்ஸவம், முதலியன செய்யத்தக்கவை என்கிறது.

ஆச்வயுக் சுக்லபக்ஷேது பிரதிபத் நவம்யந்த கே|
பிரதிபத் தினமாரப்ய விரதோத்ஸவ மாசரேத் ||

இயலாவிடின் விரதம் மட்டிலுமாவது கடைபிடித்தல் நல்லது என்கிறது.

"கேவலம் விரத கார்யம்து தினம் பிரதி தினம் பிரதி" (காரணாகமம்)

உதய காலத்தில் பிரதமை திதி உள்ள நாள் முதலாக பூசிக்கப்படவேண்டும். ஒன்பது நாள், ஏழு நாள், ஐந்து நாள், மூன்று நாள், ஒரு நாள் கடைசி நாளிலிருந்து கணக்கீட்டு,. இவ்வாறு ஒரு வகையை கடைபிடித்து, பூஜிக்க வேண்டும். தசமி அன்று காலையிலோ, மாலையிலோ சமீவிருக்ஷ பூஜை (வன்னி மர பூஜை) செய்யப்பட வேண்டும். இதனால் அரசனும், அரசும் மேன்மை பெறும் என்கிறது ஆகமம். பிரதிபத் ராத்ரி மாரப்ய பூஜயேத் ஸர்வ சக்தித : |

நவாஹம் வாத சப்தாஹம் பஞ்சாஹம் வா திரயாஹகம் ||
ஏகராத்ரியா மதாரப்ய கஜாச்வாயுத பூஜயேது |
தசம்யாம் ச தத: பிராத: தத்கும்பம்-சைவ பூஜயேத்||
நவம்யாம் பூஜயேத்தேவீம் தசம்யாம்ச சமீம் யஜேத் |
ராஜராஷ்ட்ராபி விருத்யர்த்தம் தசம்யாம் பூஜயேத் சமீம் ||

(காரணாகமம்)

சரத் காலத்தில் தேவியை பூசிப்பது மிகச் சிறப்புடையதாகும். அனைத்து மங்கள காலங்களிலும் தேவியை பூஜிக்க வேண்டும். உமையவளை பூசிப்பதே அனைத்து விரும்பும் பயன்களைத் தரவல்லது என்கிறது ஆகமம்.

உமா பூஜா விதாதவ்யா ஸர்வ காமார்த்தஸாதநீ|
அன்யஸ்மின் மங்களேகாலே சம்பூஜ்யா வரணேச்வரீ||

நிலம், நீர், தீ, காற்று, விண், கதிர், மதி, உயிர் எனும் அஷ்டமூர்த்தீஸ்வரிகளுடன் விளங்கும், ஆதிபரமேஸ்வரியையுமாக வாமாதி ஒன்பது நவசக்திகளைக் குறித்து, நவராத்ரி விரதம்

அனுஷ்டிக்கப்படுகிறது. சப்தமியில் ஆவாஹித்து நவமி வரையிலாக மூன்று கடைசி நாட்களில் செய்வது ஒரு முறை. இதனை "மூலேன ஆவாஹயேத் தேவீம் சிரவணேன விஸர்ஜயேத்" எனும் வசனப்படி மூல நட்சத்திரத்தில் சரஸ்வதியை ஆவாஹித்து திருவோண நட்சத்திரத்திலே அனுப்புதலாகிற விஸர்ஜனத்தைச் செய்ய வேண்டும் என்பது வீட்டு பூசை முறை. பெரும்பான்மையான மக்களால் இந்த நவராத்ரி பூஜை, கடைசி நாளாகிய ஒன்பதாம் நாளில், நவமி அன்று, துர்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய மூன்று தேவியர்க்கும் சேர்த்து ஒன்றாக, ஒரே நாளில் அனுஷ்டிக்கப்படுகிறது. இதுவே மஹா நவமி என்றும், சரஸ்வதி பூஜை என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஒன்பது நாட்களுள் எல்லோராலும் தவறாது இயன்ற அளவு சுருக்கமாகவேனும், தேவீ வழிபாடு செய்யத்தக்கது என்று பவிஷ்ய புராணம் வலியுறுத்தும்.

ஸம்யக் கல்போதிதாம் பூஜாம் யதிகர்தும் ந சக்னுயாத் |
உபசாரான் ததா தாதும் பஞ்சைதாந் விதரேத் ததா||
கந்தம் புஷ்பம் ச தூபம் ச தீபம் நைவேத்யமேவச|
அபாவே புஷ்பதோயாப்யாம் ததபாவேது பக்தித: ||

(பவிஷ்ய புராணம்)

முறையான பூஜை செய்ய இயலாதவர்கள் ஐவகை உபசரிப்புகளை, முறையே 1. சந்தனம், 2. புஷ்பம்அணிவித்தல், 3. தூபப் புகையிடல், 4. தீபம்காட்டல், 5. நிவேதனம்செய்தல் இவற்றையேனும், இதுவும் செய்ய இயலாதோர் 1. மலர் தூவுதல், 2. நீர்வார்த்தல் ஆகிய இரு உபசரிப்பையோ, அதுவும் இயலாவிடின் பக்தியோடு துதித்தலையோ தவறாது செய்ய வேண்டும் என்கிறது. ஆச்வினமாசமாகிய இக்காலத்தில் துர்கையை பூசித்தல் பலவகை சுகபோகங்களைத் தரும். இவர்களுக்கு நோய், எதிரி, பயம் ஏற்படாது என்கிறது ஸ்காந்தம்.

ஆச்விநே மாஸி மேஷாந்தே மஹிஷாசுர மர்தினீம்|
தேவீம் சம்பூஜயித்வாக்ரே அர்தராத்ரே சமீஷுச||
கிரீடந்தே விவிதைர் போகைர் தேவலோகேஷுதுர்லப: |
காதயோ வியாதயஸ்தேஷாம் நச சத்ருபயம் பவேத் ||
(ஸ்காந்தம்)

ஐப்பசி மாத ஆச்வினமாஸ சுக்லபக்ஷ அஷ்டமியில் நடுநிசியில் பூர்வாஷாடா நட்சத்திரத்தில், பார்வதி கோபத்தில் தக்ஷயாகத்தை அழித்தவளான பத்ரகாளி உதித்தாள், என்றும், ஆதலால் அந்த நாள் மஹாஷ்டமீ என்றும், துர்காஷ்டமீ என்றும் சிறப்புடையதாக போற்றப்பட்டு பூஜைபலிகளால் தேவீ மகிழ்விக்கப்படுகிறாள். இந்த அஷ்டமியும், மறுநாள் மஹா நவமியும் மிகச் சிறந்த விரத நாட்களாகும். பத்தாம் நாள் தசமி திதியில் வன்னி மரத்தடியை அலங்கரித்து, அம்மரத்தில் துர்கா, லட்சுமி, சரஸ்வதி, காளி மற்றும் 8 லோக மாதர்களை பூசித்து நோயற்ற, பயமற்ற பாதுகாப்பிற்கு வலம் வந்து பிரார்த்தித்தல் முறையாம்.

சமீ சத்ரு விநாசாய சமீ பாப பிரணாசிநீ |
சமீ ஸம்பத்கரீ சைவ சமீம் சைவ நமோநம:" ||

என்று கூறி மரத்தை வணங்குமாறு காரணாகமம் கூறுகிறது. ஸ்ரீ துர்கா பரமேஸ்வரியை எப்பொழுதும் வலது இடது பக்கத்தில் லக்ஷ்மீ, வாணீ ஆகிய இரு சக்திகளை உடையவளாக "லலிதா ஸஹஸ்ர நாமம்" புகழ்கிறது.

1. ஸசாமர ரமா வாணீ ஸவ்ய தக்ஷிண சேவிதா, 2. ரமாவாணீ நிஷேவிதா என்பதாம். ஒவ்வொரு மாதமும் சுக்லபக்ஷபிரதமை முதல் ஒன்பது நாட்கள் வரை மாத நவராத்திரி எனப்படும். அவற்றுள் வசந்த காலத்தில் - ஸ்ரீராமநவமியுடன் முடிவடையும் "வாஸந்திக நவராத்ரி"யும், சரத்காலத்தில்-மஹா நவமி சரஸ்வதி பூஜையுடன் முடிவடையும் "சாரதா நவராத்ரி"யும் சிறந்தவையாம். "சரத்காலே மஹாபூஜா கிரியதே யா சவார்ஷிகீ" என்கிறது. தேவீமாஹாத்மியசப்தசதீ. ஆண்டுதோறும் சரத்

காலத்து பெரும் பூஜாகாலமே ஒன்பது நாட்களான நவராத்திரியாம். வித்தைகளுக்கு அதிதேவதையான ஸரஸ்வதியை வழிபடுதலால் ஞானம் பெறலாம், குமரகுருபரசுவாமிகள் இயற்றிய "சகலகலாவல்லி மாலையைக்" கூறி துதித்திட்டால் கல்வியில் தேர்ச்சி பெறலாம். உலக அன்னையை வழிபடும் உன்னதத் திருநாளே விரத நாளாம். சிவசக்தியே உலகப் பெற்றோர் என்கிறது ஆகமம்.

> பிரம்மாதி ஸ்தம்ப பர்யந்தம் சக்தி பிருந்தாத் விநிஷ்கிருதம் |
> சக்திர் மனோன்மனீ மாதா சிவ ஏவ பிதா குருர் |
> மனோன்மனீ சக்திரூபா பும்ரூபா ஸ்யாத் சிவார்த்தகம் ||

என்கிறது சிவாகமம்.

சக்தி பூஜையில் அருகம்புல், எருக்கு இலை மற்றும் பூ , மந்தாரப்பூ இவற்றை விலக்கிடல் நன்று என்கிறது மந்திரமகோததி. கோயில் அனைத்திலுமே கருவறையில் அருவமாய் நீங்காஇடம் பெற்று உள்ளவள் லக்ஷ்மி மற்றும் சரஸ்வதி ஆவர். மையத்திலிருந்து பின்புறம் பத்தில் ஐந்தாம் பதம் துர்கா லக்ஷ்மி மற்றும் சரஸ்வதி பிம்ப ஸ்தாபனத்திற்கு உரிய இடமாகும். இவர்கள் மூவரும் ஓரே பராசக்தியின் அம்சங்களே. ஒருவரை பூசித்தாலும் மற்ற இருவரையும் பூசித்ததாகவே ஆகும். ஒன்றே பலவாக குணம், செயல், பயன், இவற்றிற்கு ஏற்ப உருவத்தைப் பெறுகிறது. "ஏகைவ சிவசக்திஸ்து மூர்த்திபேதாத் அனேகதா" என்று அம்சுமதாகமம் விளக்குகிறது. பூஜையில் முதலில் புனிதம் கருதி அணியும் தர்பைப் புல் மோதிரத்திலேயே சரஸ்வதியும், லக்ஷ்மியும் இடம் பெற்றுள்ளனர். ஆலய பூஜையில் முதலில் வாஸ்து பிரம்மனிடத்திலும், சரஸ்வதியிடத்திலும் பூசித்து அனுமதி பெறுவர். தேவதைகளுக்கு உறைவிடமான மந்திரங்களுக்கும், அவற்றின் எழுத்துக்களுக்கும், நாக்கே இருப்பிடம். அதில் உள்ளவளே வாகீச்வரியாம் "சரஸ்வதி" என்கிறது வாதுளாகமம்.

> லக்ஷ்மீர், மேதா, தரா, புஷ்டிர், கௌரீ, துஷ்டிர், பிரபா, திருதி: |
> ஏதாபிர் பாஹி தநுபிர் அஷ்டாபிர் மாம் ஸரஸ்வதீ" || மத்ஸ்யபுராணம்.

எட்டு வகை வடிவங்களில் விளங்கும் சரஸ்வதி நம்மைக் காக்கிறாள் என்கிறது மத்ஸிய புராணம். முக்குணங்களின் வடிவாய் விளங்குபவள் தாய் பராசக்தியே. யாவரும் நவராத்திரியில் ஒருமுறையேனும் துர்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி, ஆகிய தேவிகளை துதித்து வழிபடவேண்டும். "ந மாதுப்பரம் தைவதம்" தாயினும் உயர்ந்த தெய்வம் இல்லை என்பர். எனவே, ஸ்ரீ மாதாவாகிய, ஜகன்மாதாவாகிய தேவியை வழிபடுதல் அவசியம்.

பாசாங்குச தரா வாணீ வீணா புஸ்தக தாரிணி |
மம வக்த்ரே வஸேன் நித்யம் ஸந்துஷ்டா ஸ்துச ஸர்வதா || என்றும்
சதுர்தசஸு வித்யாஸு ரமதே யா ஸரஸ்வதீ |
ஸாதேவீ கிருபயா மஹ்யம் ஜிஹ்வா ஸித்திம் கரோதுச ||

என்று துதித்தும், அ முதல் க்ஷ வரையிலான 50 எழுத்து (மாத்ருகா) சக்திகளின் வடிவினை ஒன்பது பகுதிகளாக பெற்று உள்ளதால் 9 நாளில் ஸரஸ்வதியை பூஜித்து, முடிவில் வேண்டிய பயன் பெற மனமுருகி வேண்டுதலை செய்ய வேண்டும்.

ஸரஸ்வதி! நமஸ் துப்யம் வரதே! காமருபிணி |
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர் பவது மே ஸதா ||

என வேண்டி தசமியில் பயிலத் துவங்க வேண்டும். இதனால் வாக்ஸித்தி, சொல் பலித்தல், உச்சரிப்பு, ஒலி திருந்துதல், நினைவாற்றல் ஆகியவை ஏற்படும்.

ஸ்ரீ, லக்ஷ்மீ என்ற சொற்கள் திருமகள், செல்வம், சோபை என்ற பொருள்களில் ஆளப்படுகின்றன. விருப்பங்களையுடைய பக்தர்களால் ஸேவிக்கப்படுகிறவள் என்பது "ஸ்ரீ" என்ற பதத்தின் பொருள், லக்ஷணம் பொருந்தியவள் என்பது. "லக்ஷ்மீ" என்ற பதத்தின் பொருள், செல்வங்களுக்கு அதிதேவதை லக்ஷ்மி. மக்களால் விரும்பப்படும் செல்வங்கள் பலவகைப்பட்டன. ஆதலால் அவற்றையளிக்கும் லக்ஷ்மியானவள், உருவம், ஆயுதம், நிலை இவைகளில் வெவ்வேறு

விதமாகக் காட்சியளிக்கிறாள். "ஸர்வஸயாத்யா மஹாலக்ஷ்மீ" அனைத்திற்கும் மூத்தவள் "மஹா லக்ஷ்மி" என்கிறது தேவீ மாகாத்மிய சப்தசதீரஹ்ஸ்யதிரய வசனம். உலகத்தின் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் ஆகிய முத்தொழிலுக்கும் உரிய காரணத்தின் லக்ஷணம் பொருந்தியிருப்பதால் "மஹாலக்ஷ்மீ" எனப் பெயர் பெற்றாள். இவளே 18 கைகளுடன் ஸர்வதேவதாஸ்வரூபினியான "மஹாலக்ஷ்மீ துர்கா பரமேச்வரீ"யாவாள். இவளது தேவீ மாகாத்மிய சப்தசதியில் முச்சரிதத்தில் ஒன்பது அசுரவதம் கூறப்படுகிறது. அவை (1) மது, (2) கைடபன், (3) மஹிஷாசுரன், (4) தூம்ரலோசனன், (5) சண்டன், (6) முண்டன், (7) ரக்தபீஜன், (8) நிசும்பன், (9) சும்பன் என்பவர்களான 9 அசுரர்களைக் கொன்று, போர்ப்படையுடன் கொற்றம் மிக்கவளாய் வீரச் செயல் புரிந்தமையால் "மஹாலக்ஷ்மி துர்கா" என்ற நாமத்துடன், ஸகல தேவர்களின் உடலிலுள்ள சக்திகளும் ஒன்று சேர்ந்து அவதரித்த, திருவுருவம் பதினெட்டு கைகளுடன் விளங்குகிறது. "துர்கம் நாசயதி யா நித்யம் ஸா துர்கா பரிகீர்த்திதா" என்று தேவீ புராணம் துர்கா எனும் பெயர்ச் சொல்லை விளக்குகிறது. "துர்கா" என்ற சொல் பஞ்சாக்ஷர சேர்க்கையாம். இதனுள் 5 எழுத்தொலிகள் உள்ளன. அவை விபத்தி வாசகோ துர்க: ஆகாரோ நாசவாசக:" என்பதால் ஆபத்தினின்று காத்தருள்பவள் துர்கா என்கிறது. (1) மூன்றாம் த என்ற எழுத்து ஒலி தைத்யர்களை அழிப்பதையும், (2) உ என்ற எழுத்து ஒலி இடையூறுகளைப் போக்குவதையும், (3) ர என்ற எழுத்து ஒலி ரோகத்தைப் போக்குவதையும், (4) மூன்றாம் க என்ற எழுத்து ஒலி பாவத்தை அழிப்பதையும், (5) ஆ என்ற எழுத்தொலி பயம், எதிரி, இல்லாமை, இவற்றை போக்கி அருள்வதையும், பெண்மையையும், தாய்மையையும், உணர்த்துவதாக தேவீ புராணம் கூறுகிறது. இதனை சப்தசதியின் இந்திராதிகளின் துதியும் "தாரித்ரிய துக்க பயஹாரிணி காதுவதன்யா" என்று தரித்ரம், துயரம், பயம் இவற்றை போக்குபவள் நீ ஒருத்தியே எனக் கூறி உறுதி செய்கிறது. ஒன்பது பகுதிகளாக

விளங்கும் 50 எழுத்து மாத்ருகா சக்தி வடிவமான "சப்தபிரம்மமயீ சாரதா" 9 தின விரத பூஜையால் மன நிறைவு பெற்று அருள்கிறாள்.

வித்யைக்கு அதிதேவதை சரஸ்வதியாவாள், ஸகல வித்தைகளும் இவளருளால் மட்டுமே கைக்கூடும். வித்யா புத்தகத்தின் வடிவில் உள்ளது. எனவே இவளை புத்தகங்கள், எழுத்துகள் பதித்த சுவடிகள், முதலிய பதிவேடுகளில் பூசித்தல் வேண்டும். எனவே தான் தெய்வத் திருவுருவங்கள் பல தமது கைகளில் புத்தகத்தை ஏந்தி நமக்கு காட்சி தருகின்றன. எனவே புத்தகம் என்பது பூசித்தலுக்கு ஏற்ற, புனித வடிவப் பொருளாம். ஆதலால் இதனை மாணவர்களும், மற்றவர்களும் மதிக்கத்தக்க, வகையில், முறையில், கௌரமாக வைத்து, தூய்மையாக கையாள வேண்டும். ஆகமங்கள் சிவபெருமானை, (1) சூரியன், (2) தனது உயிர், (3) லிங்கம், (4) தீச்சுடர், (5) குரு, (6) புத்தகம் எனும் ஆறு உறைவிடங்களில் பூசித்திடப் பணித்துள்ளது. இதில் புத்தகம் உள்ளதாலும் புத்தக மேன்மையை உணரலாம். நவராத்ரியில் புத்தகங்களை அடுக்கி, அந்த புத்தக மண்டலத்தில், வாகீச்வரியான சரஸ்வதியை வழிபடல் ஞானத்தைத் தரும். ஸ்ரீ சக்கரத்தில் ஸ்ரீ வித்யா பூஜை செய்வது போகமோட்சமிரண்டையும் தரும். நவராத்ரியில் 8-ம் நாள், அல்லது, ஒரு நாளில் வில்வமரத்திலோ, அல்லது அதன் கிளையை கொணர்ந்து நிலை நாட்டியோ, துர்கையை வழிபடுதல் இஷ்டசித்தி தரும். சுவாசினிப் பெண்கள், கன்னிப் பெண்கள், பசு, இவர்களைப் பூசித்தல் ஸகலபாக்யம் தரும். ஒன்பது நாட்களிலும் 9 தானிய வகை சுண்டல் உணவு படைத்து துதித்தால் கிரக தோஷம் நீக்கும். இயலாதோர் தேவியின் பெயரை பலமுறை ஜபிக்கலாம். 4 உதாரண நாம மந்திரங்கள்.

(1) ஓம் நமச்சண்டிகாயை, (2) ஓம் நமோதேவ்யை, (3) ஓம் துர்காம் தேவீம் சரணமஹம் பிரபத்யே, (4) ஓம் நமச் சாமுண்டாயை, என்பவையாம். பூஜையில் பாயஸம் / காச்சிய பாலில் தேன் / கற்கண்டு / சர்க்கரையில் ஒன்றைச் சேர்த்து நிவேதனம் செய்திடல் முறை. நவராத்ரி

என்பது பூஜை மட்டிலுமோ, உத்ஸவத்துடனோ கொண்டாடலாம். இயலாதோர் விரதம் மட்டிலும் கடைபிடிக்கலாம். எனவே 9 நாளும் விரதமிருந்து தேவியின் "நாம பாராயணம்" , ஜபம் செய்வதால் தேவியை மகிழ்விக்கலாம். மதங்காகமம் ஒரு தேவதையின் மந்திரத்தை ஜபித்துப் பயன் பெற ஆறு வழிகளை விளக்குகிறது. அவை ஜபம், ரக்ஷை, பரிஞானம், நிச்சயம், ஸத்வம், விரதம் என்பனவாம். திட உறுதிக் கொள்கை, நன்நம்பிக்கை, குரு பூஜை, சமமாக கருதுதல், புலன்களை அடக்கி வெல்லுதல், அளவான உரிய உணவு. இவை விரத கால மந்திர ஜப சித்திக்கு உதவும் என்கிறது. "அந்தர்முக ஸமாராத்யா" என்பதால் பொருள் இல்லா-விடினும் தன்னகத்தே பூஜைக்கு மனதால் பொருள்களை, கற்பனையால் பாவித்துப் பின் அர்ப்பணித்து அகவழிபாடாற்றியும் பயன் பெறலாம். விரதம் மேற்கொண்ட விரதிக்கு ஜபம் செய்யும் காலத்தில், (1) மனச்சம்ஹரணம் (மன ஒடுக்கம்), (2) சௌசம் (புனிதம்), (3) தியானம் (நிலைத்த எண்ணம்), (4) மந்திரார்த்த சிந்தனம் (மந்திரத்தின் பொருளை சிந்தித்தல்) ஆகியன 4-ம் தேவை. விசேஷவிரத பூஜை மற்றும் மந்திரபுரச்சரணக் கிரியைகளுக்கு சரத்கால ஆச்வீன மாதம் (ஐப்பசி) உத்தமமான பருவகாலமாகும் என்கிறது ருத்ரயாமளம். மனித உடலில் ஸர்வாந்தர்யாமினியாய் 9 நவ தூதிகா சக்திகளாய், எலும்பு, தசை, குருதி, முதலியவற்றின் வல்லமையாய், நவக்கிரஹ நாயகியாய் விளங்குவதால் தேவியை 9 இரவில் பூசித்தல் (நிறைவு) பூர்ணத்தைத் தரும். பிராண சக்தியாகி, நவதூதிகளாகி உள்ளவளை நவராத்திரியில் வழிபட்டு மகிழ்விப்பதால், தேவி பக்தனை சிவனோடு சேர தூதியாகி, தூது போல் உதவி, ஞானம் நல்கி உதவுகிறாள், என்பதே தத்வார்த்தம். துர்கையே சிவதூதியாவாள். எனவே, இவளை வழிபடுதலே விரைந்து பயன்தரும். அனைத்து உயிர்களுள்ளும் அந்தர்யாமினியாக உள்ளிருந்து, தேவியே தூண்டுகோலாய் இருந்து, ஞானத்தை அளித்து, தன்னை உணரச் செய்து, இறையோடு சேர்த்து வைக்கும் இயல்புடையவள் இறைவி. ஆதலால் இவளே "விரைவில் உடனே அருள் தருபவள்" என்று

பொருள்பட, லலிதா ஸஹஸ்ரநாமாக்களில், இருமுறையாக "க்ஷிப்ர பிரஸாதினீ" என்றும், "ஸத்ய பிரஸாதினீ" என்றும் போற்றப்படுவதால் நன்கு உணரலாம். தேவியின் மஹிமை கூற இயலாத வகையில் அளவற்றது. "அறிந்து செய்தாலும் அறியாது செய்தாலும் அன்போடு செய்யும் பூசையை ஏற்று அருள்வேன்" என்று தேவியே கூறியுள்ளாள், தேவீமாஹாத்மியத்தில்

ஜானதா அஜாநதா வாபி பலி பூஜா ததா கிருதாம்|
பிரதீச்சிஷ்யாம் யஹம் பிரீத்யா வன்னிஹோமம் ததா கிருதம்||

மஹிஷாசுரன் முதலிய எதிரியான அசுரர்களிடத்தும் வெளியிட்ட "பெருங் கருணை வடிவானவள்". அவனுக்கு தம்பதத்தில் நீங்கா இடமளித்து அருளியவள், தேவீ மாகாத்மியத்தில் சரிதப்படி, காமம், குரோதம், ஆணவம், முதலிய தீய குணங்கள் 9 அசுரர்களாக, அதர்மமாக, தீய வடிவில் கூறப்பட்டு, பின் ஒடுக்கப்பட்டு, உலகைக் காத்தாள். எனவே அறம் வளர்த்த நாயகியும், ஜகதீச்வரியுமாகி விளங்குவதால் 9 அசுர வதம் பற்றிய தேவீ சரிதம் 9 நாட்களில் எண்ணிப், போற்றுவது ஒரு மரபு ஆகும். "கராங்குளி நகோத்பன்ன நாராயண தசாகிருதீ" என்று பிரம்மாண்ட புராண லலிதா ஸஹஸ்ரநாம வசனத்திற்கு ஏற்ப, தேவியை "ஸ்ரீ ராம ரூபிணியாக" எண்ணி, ராவணனை வதைத்த சரிதத்தை நினைவு கூர்ந்து, "தசரா" என வடஇந்தியர் நவராத்ரியைப் போற்றுவர். "தசமுகனை, = ராவணனை, ஹரா = ஸம்ஹரித்தவள்", என சண்டியைப் போற்றுவர். மஹாகாளிக்கு 10 முகம், 10 கை, 10 கால் உள்ளதாலும் சாக்தத்தில் காளியே பரதேவதை ஞானதாயினீ என்பதாலும் 10 நாட்கள் 10 மஹாவித்யாவாக பூஜித்தலே "தசரா" - 10 நாள் என்போருமுண்டு. மஹா அஷ்டமீ அன்று நள்ளிரவு காளிக்கு பலி பூசை நவராத்திரியில் செய்வது மரபு. மஹாநவமி அன்று "மஹா சரஸ்வதீ பூஜா" நடைபெறும். தேவர்கள் தங்கள் ஆயுதங்களை போர்க்கோலம் பூண்ட துர்கையிடம் அளித்துப்பின் தசமி

அன்று வெற்றிக்குப் பின், மீண்டும் பன்மடங்கு வல்லமையுடன், தங்களின் ஆயுதப் படைகளை, தேவியிடமிருந்து வணங்கிப் பெற்றதால், பூமியில் நாமும் நவமியில் ஆயுதங்களையும், அதில் உள்ள ஜட சக்தியையும் பூசித்துப்பின் விஜயதசமியில் மீண்டும் பூசித்து, வரம் வேண்டிப் பெற்றுப் பயன்படுத்துவது, வெற்றியுடன் வளம் தருவது, என்பது நமது மரபு நம்பிக்கை. நவராத்ரியில் தேவியிடத்தில் உளமார்ந்த பக்தியோடு வழிபாடாற்றுதல் நாம் விரும்பும் பயன்களைப் பெற உதவும். பக்தி என்பது ஒன்பது வகையாக வெளிப்படுத்தத் தக்கது. அவை (1) சிரவணம் = சரிதம் மற்றும் புகழ்கேட்டல், (2) கீர்த்தனம் = புகழ் பாடுதல், (3) தேவ்யாஸ்மரணம் = தேவியை நினைத்தல், (4) பாத சேவனம் = திருவடிப் பணி செய்தல், (5) அர்சனம் = பூசித்தல், (6) வந்தனம் = வணங்குதல், (7) தாஸ்யம்= தொண்டாற்றல், (8) ஸக்யம் = நட்புறவு வைத்தல், (9) ஆத்ம நிவேதனம் = தன்னை உளமார அர்ப்பணித்தல் ஆகும்.

சிரவணம் கீர்தனம் தேவ்யாஸ்மரணம் பாதசேவனம் |
அர்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்ய மாத்மநிவேதனம் ||
(பாகவதம்)

இதுபோன்ற விசேஷ விரத பூஜா காலங்களில் உரிய நியமங்களை முதலில் பின்பற்றிட கைக் கொள்ள வேண்டும். அவை. சூரிய வந்தனம், ஜபம், பூஜை, ஹோமம், தர்பணம் முதலியவைகளாகும

நித்யம் சூர்ய முபஸ்தாய தஸ்யசாபி முகோ ஜபேத|
தேவதா பிரதிமாதௌ வா வஹ்னௌ வாப் யர்ச்ய தன்முக||:- 1
ஸ்நாந பூஜா ஜப தியான ஹோமதர்பண தத்பர: |
நிஷ்காமோ தேவதாயாம்ச ஸர்வ கர்ம நிவேதக:|| -2
ஏவமாதீன்ச நியமான் விரதீ மந்த்ரீ ஸதா சரேத் |

வீட்டில் யாவரும் விரத நியமங்களுடன் பூசிக்கலாம். இயலாவிடின் தேவீ துதிப் பாடல்களைப் பாடுவது முதலியவற்றுடன்

ஆலயத்தில் தரிசித்துப் பயன்பெறலாம். அறிதாகிய தாய் வழிபாட்டுக் காலமாகிய இந்த நவராத்ரி நன்நாளில் தேவியருள் பெற முயல்வோமாக.

நவராத்ரி விரத காலத்தை முதலில் நன்கு ஆராய்ந்து நிச்சயித்தல் வேண்டும். ஆஸ்வயுஜ மாதத்தில் வளர்பிறையின் பிரதமை திதி முதல் நவமி திதி வரையிலான ஒன்பது திதிகள் கொண்ட ஒன்பது நாட்களில் நவராத்திரி கடைபிடிக்கத்தக்கது. ஆஸ்வயுஜ மாதம் என்பது ஐப்பசி மாதம் ஆகும். ஆனால் புரட்டாசி மாதம் கடைபிடித்திடுவர். காரணம், மாதகால அளவு முறைகள், சூரிய கால அளவு முறை. சந்திர கால அளவு முறை, நட்சத்திர கால அளவு முறை, என மூவகைப்படும். கோயில்களில் ஸௌரமான முறையே கடைப்பிடிக்கப்படும். (1) சூரியன் ஒரு ராசியில் உதிக்கும் நாட்களை ராசியின் பெயரால் 1 மாதமாகக் கொள்வது.(2) சாந்திரமான முறை வளர்பிறை பிரதமை முதல் அமாவாசை வரை ஒரு மாதமாகக் கொள்வதாம். (3) "நாட்சத்திரமானம்" நள்ளிரவு முதலாக கொள்வது. இவற்றில் சிவராத்ரி விரதம் நீங்கலாக, எல்லா விரதங்களுக்கும் சாந்திரமானமே கடைபிடிக்கப்பட வேண்டும். எனவே புரட்டாசி மாதத்தில் அமாவாசை முடிந்தபின் "ஆஸ்வயுஜம்" எனும் "ஐப்பசி மாதம்" துவங்கி விடுவதால் புரட்டாசி மாத அமாவாசைக்கு மறுநாள் முதலாக 9 நாட்கள் நவராத்ரி விரத காலமாகும். தினம் அதாவது நாள் என்பது, சூரிய உதயத்தில், பிரதமை என்று உள்ளதோ அதுமுதலாகவே கணக்கிட வேண்டும். இரவில் பிரதமை இருத்தல் வேண்டும் என்பதால் அமாவாசை முடிவில் மாலையில் துவங்கும் பிரதமையை முதல் நாளாகக் கொள்ளுதல் முறையாகாது, காரணம், ஆச்வயுஜம் வந்த பின்பே நாள் ஏற்கத் தக்கது. எனவே திதியின் தோற்ற கால வியாபக (பரவியுள்ள) கால நிலையைப் பொருத்து நவராத்ரி துவக்கம், மஹா அஷ்டமி, மஹா நவமி, திதிகளையும், அவற்றில் செய்யத்தக்க கிரியைகளையும் முடிவு செய்தல் முறை. "ஆச்வயுக் சுக்லபசேஷது பிரதிபத் நவம்யந்தகே" என்பதாலும், "பிரதிபத் தினமாரப்ய விரதோத் ஸவமாசரேத்" எனும் காரணாகம

வசனத்தால், பிரதிபத் எனும் பிரதமை இரவில் உதித்தால் தினம் மாதம் மாறாததால் மறுநாளே விரதாரம்பம், முதல் நாளாம். இதனை "பிரதி பத் தினமராப்ய" என்பதால் திதியை விட தின சப்த கூற்றால் உணரலாம். மேலும் கோவிலில் எப்பொழுதும் என்றும் தேவீ நித்ய ஸாந்நித்யமாய் உள்ளதால், பூஜை தரிசனம் செய்யலாம். ஆனால், தனி நபர் வீட்டில் கொலு, பூசை துவங்குதல் மற்றும் விரதம் கடைபிடித்தலுக்கு "விரத கால நிச்சயம்" செய்திட வேண்டும். வீட்டில் புதிதாய் அமைந்திராத தேவீ சான்னித்யப் பணியைத் துவங்குவதால், வீடுகளில் அமாவாசை அன்றே கலசம் வைத்து விடுவர். கோயிலில் கலசம் வைத்தால், உடன் பூசையும், நாள் எண்ணிக்கையும் துவங்கும் என்பதாலும், ஆகம வசனம் பிரதமை முதல் நவமி வரையில் என இருப்பதாலும், பிரதமையில் கோயிலில் கலசம் வைத்து துவங்குவது குற்றமாகாது. கோவிலுக்கு சூரிய உதயத்திலிருந்து, மறு உதயம் வரையில் உள்ள காலமே ஒரு தினமாம். விரதத்திற்கு மதியமும், சந்திர பலமும் திதிகாலமும் சேர்ந்திருந்தால் நலம். பெண் தெய்வ பூசை வழிபாடு மாலையில் செய்வது தனி சிறப்புப் பயன்தருவது. ஆதலால் "நவராத்ர தினாராத்யா" என்கிறது துர்கா ஸஹஸ்ர நாம ஸ்தவம்.

"பர்வண்யாராத்யா", "தர்சபூஜ்யா" என்கிற வசனத்தால் ஜகன் மாதாவை, ஜகன் மங்கள தாயினியை, தாயன்பு கொண்டு யாவரும் தவமிருந்து வழிபட வேண்டிய நாட்கள், 8வது-அஷ்டமி, 9வது நவமி, 14வது சதுர்தசி, 15வது பௌர்ணமி, திதி உள்ள தினங்கள் ஆகும். மாத நவராத்ரி, வசந்த நவராத்ரி, சாரதா நவராத்ரி, எனும் மூவகை நவராத்ரிகளுள், சாரதா எனும் சரஸ்வதி பூஜை முடிவாக அமைந்த நவராத்ரியானதும், சரத் காலத்தில், மந்திர ஜப புரச்சரணங்களுக்கு உகந்த உத்தம பருவகாலமான ஆச்வீஜத்தில் வருவதுமான "சாரதா நவராத்திரி" மிகவும் பயன்தரவல்லதாம். காளியும் ஞானமே வடிவானவள், சரஸ்வதியும் ஞான ரூபிணியாவாள். இருவருக்கும் "ஐம்" எனும் வாக்பவ பீஜ ஒலியே சக்தி உடையது. மஹா சரஸ்வதியே, சும்ப,

நிசும்பர்களை மாய்த்தாள், என தேவீமாகாத்மியம் விளக்குகிறது. இதனால் துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதி, மூன்றும், ஒரே பராசக்தி அம்சமாகிய, முக்குண வடிவினர் என்பதையும், அபேத பாவனையோடு மஹாலக்ஷ்மியே, மூத்தவளான அன்னை என்பதை உணர்ந்து வழிபட்டு பயன்பெறவும். சரஸ்வதி பூஜையில் சிறப்பாக புத்தகம், எழுதுகோல், ஏடுகள் இவற்றை வைத்து அலங்கரித்து, மந்திர அக்ஷர எழுத்து, உருவில், ஒலி வடிவில், மொழி வடிவில், அறிவு வடிவில், சச்சிதானந்த பரபிரம்மஸ்வரூபிணியாக பாவித்து, பூசித்திடவேண்டும். சப்தமியில் 7-ம் நாள் துவங்கி நவமியில் முடித்து பூசித்தல் வேண்டும். இந்த 3 நாட்களிலும் படித்தல், எழுதுதல் இவற்றை விலக்கி, உரிய புத்தக எழுத்தாணிகளை இடையில் எடுக்காமல், தசமி அன்று காலையில், மீண்டும் புனர் பூசையைச் சுருக்கமாகச் செய்து, வித்யாரம்பம் செய்தல் வேண்டும். ஸரஸ்வதியை 12 சிறப்பு நாமங்களால் புகழ்ந்து வேண்டித் துவங்கிட, "வித்யாஸித்தி", ஏற்படும். இந்த சரஸ்வதியின், துவாதச நாம ஸ்தோத்திரத்தை தினமும் பாராயணம் செய்தும் அறிவாற்றல் பெறலாம்.

வாணீதுதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல் வாள் என் உள்ளத்தின்
உள்ளே இருப்பள் இங்கு வாராது இடர்.

சரஸ்வதி துவாதச நாம ஸ்தோத்திரம்

பிரதமம் [1]'பாரதீ' நாம துவிதீயம்ச [2]'ஸரஸ்வதீ' |
திருதீயம் [3]'சாரதா' தேவீ சதுர்த்தம் [4] 'ஹம்ஸவாஹிநீ' || 1
பஞ்சமம் [5] 'ஜகதீ' கியாதா, ஷஷ்டம் [6]'வாகீச்வரீ' ததா |
[7]'கௌமாரீ' சப்தமம் புரொக்தா, அஷ்டமம் [8] 'பிரம்மசாரிணீ'||2
நவமம் [9]'புத்திதாத்ரீ' ச தசமம் [10]'வரதாயினீ' |

ஏகாதசம் [11] 'சஷூத்ரகண்டா துவாதசம் [12]'புவனேச்வரீ' || 3
பிராம்ஹீ துவாதச நாமாநி, திரிஸந்தியம் யப்படேன்நரர் :|
ஸர்வஸித்திகரீ தஸ்ய பிரஸன்னா பரமேச்வரீ || 4
மந்த்ராசஷர மயீவாணீ சாரதா வாகதீஸ்வரீ |
ஸாமேவஸது ஜிஹ்வாக்ரே பிரம்ம ரூபா ஸரஸ்வதீ || 5

இவ்விதம் எளிய முறையில் பக்தியோடு கசிந்துருகி இப் 12 பெயர்களைக் கூறி புகழ்ந்து வேண்டிக் கொண்டால் இஷ்டஸித்தி ஏற்படும். காலை, மதியம், மாலை எனும் முப்பொழுதும் இவ்விதமே துதிக்கலாம்.

ஸரஸ்வதீ திவ்யதிருஷ்டா வீணா புஸ்தக தாரிணீ |
ஹம்ஸவாஹ ஸமாயுக்தா வித்யா தானகரீ மம||

என்று நம்பிக்கையுடன் பிரார்த்தித்திட கல்வி அறிவு பெருகும். தேவியின் திருவருளைப் பெற்று உய்ய, உத்தம புண்ய நவராத்ரி கால வழிபாட்டைச் செய்து நாமும் இன்புறுவோமாக.

ஸ்வகால வர்ஷீ, பர்ஜந்யஸ், சுபிசஷம் விஜயீ நிருப: |
சாந்தாநி ஸர்வ பூதாநி, பயஸ்விந்யப் பயோபிருத: ||
யச் சிவோ நாமரூபாப்யாம் யா தேவீ ஸர்வ மங்களா|
தயோஸ் ஸம்ஸ்மரணாத் பும்ஸாம் ஸர்வதோ ஜய மங்களம் ||

"சுப மஸ்து நித்யம்"

தொகுப்பாசிரியர்

ஆகமப் பிரவீணர் & வியாகரண சிரோமணி
சிவஸ்ரீ வி. சோம சேகர சிவாசாரியர் M.A.
சென்னை - 1.

சுபம்

உ

ஸ்ரீ சாமுண்டீஸ்வரீ துணை.

பாதுகாப்பு அளிக்கும்
ஸ்ரீ துர்கா கவசம்.

ஈஸ்வர உவாச

ச்ருணு தேவி! பிரவக்ஷியாமி கவசம் ஸர்வஸித்திதம் |
படித்வா பாடயித்வாச நரோ முச்யேத ஸங்கடாத் ||
அக்ஞாத்வா கவசம் தேவி! துர்கா மந்த்ரம் ச யோ யஜேத் |
ஸ சாப்நோதி பலம் தஸ்ய பஞ்ச நாகம் வ்ரஜேத் புந ||

உமாதேவீ சிரப் பாது லலாடே சூலதாரிணீ |
சக்ஷுஷீ கஞ்சரீ பாது கர்ணௌ ச துவாரவாஸிநீ ||
ஸுகந்தா நாஸிகே பாது வதனம் ஸர்வதாரிணீ |
ஜிஹ்வாம் ச சண்டிகாதேவீ கிரீவாம் ஸௌபத்ரிகா ததா||
அசோகவாஸிநீ சேதோ த்வௌ பாஹூ வஜ்ரதாரிணீ |
ஹிருதயம் லலிதாதேவீ உதரம் ஸிம்ஹ வாஹிநீ ||
கடீம் பகவதீதேவீ த்வாவூரு விந்திய வாஸிநீ |
மஹாபலா ச ஜங்கேத்வே பாதௌ பூதலவாஸிநீ ||
ஏவம் ஸ்தீதா(அ)ஸி தேவி!த்வம் த்ரைலோக்யே ரக்ஷணாத்மிகா |
ரக்ஷமாம் ஸர்வகாத்ரேஷு துர்கேதேவி! நமோ(அ)ஸ்து தே ||

* * *

அஷ்டௌ புஜாங்கீம் மஹிஷஸ்ய மர்திநீம்
ஸசங்கசக்ராம் சரசூலதாரிணீம்|
தாம் திவ்யயோகீம் ஸஹஜாத வேதஸீம்
துர்காம் ஸதா(அ)ஹம் சரணம் பிரபத்யே ||

* * *


ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்கா பரமேஸ்வரி

ஸ்ரீ துர்கா ஸப்த சுலோகீ ஸ்தவம்

அனைவரும் அகமும் புறமும் தூய்மையாகி, தீபம் ஏற்றி, தீச்சுடரில் துர்க்கையை எண்ணிப் பூசித்து, துர்கா ஸப்த சுலொகீ தோத்திரத்தை பாராயணம் செய்க.

சிவ உவாச :- தேவித்வம் பக்தி ஸுலபே ஸர்வகார்ய விதாயினி |
கலௌஹி கார்யஸித்யர்த்தம் உபாயம் ப்ரூஹி யத்நத: ||

தேவ்யுவாச :-

ச்ருணுதேவப் பிரவக்ஷியாமி கலௌ ஸர்வேஷ்ட ஸாதநம் |
மயா தவைவ ஸ்நேஹேநாப் யம்பா ஸ்துதி: பிரகாச்யதே ||
ஓம் அஸ்யஸ்ரீ துர்கா ஸப்த சுலொகீ ஸ்தோத்ரமந்திரஸ்ய,
நாராயண ரிஷிர், அனுஷ்டுப் சந்தஸ், ஸ்ரீ மஹாகாளீ,
மஹாலக்ஷ்மீ, மஹாஸரஸ்வத்யோ தேவதா: |
ஞாநிநாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா |
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹா மாயா ப்ரயச்சதி || 1
துர்கே ஸ்மிருதா ஹரஸி பீதி மசேஷஜந்தோ:
ஸ்வஸ்தைஸ்மிருதா மதிமதீவ சுபாம் ததாஸி |
தாரித்ரிய துக்க பய ஹாரிணி காத்வதன்யா
ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர சித்தா || 2
ஸர்வமங்கள மாங்கள்யே! சிவே! ஸர்வார்த்த ஸாதிகே |!
சரண்யே! திரயம்பகே! கௌரி! நாராயணி! நமோ (அ)ஸ்து தே || 3
சரணாகத தீநார்த்த பரித்ராண பராயணே! |
ஸர்வஸ்யார்த்திஹரே! தேவி! நாராயணி! நமோ (அ)ஸ்து தே || 4
ஸர்வஸ்வரூபே! ஸர்வேசி! ஸர்வசக்திஸமன்விதே! |
பயேப்யஸ் திராஹி நோ தேவி! துர்கேதேவி! நமோ (அ)ஸ்து தே || 5
ரோகான் அசேஷான் அபஹம்ஸி துஷ்டா
ருஷ்டா து காமான் ஸகலான பீஷ்டான் |
துவாமாச்ரிதானாம் ந விபன் நராணாம் 6
த்வாமாச்ரிதா ஹிஆச்ரயதாம் பிரயாந்தி ||
ஸர்வா பாதா பிரசமனம் திரைலோக்யஸ்யா (அ)கிலேச்வரி |
ஏவமேவ த்வயா கார்யம் அஸ்மத் வைரி விநாசனம் || 7

உ

ஸ்ரீ மஹா லக்ஷ்மி அஷ்டகம்

இந்திர உவாச :-

நமஸ்தே(அ)ஸ்து மஹாமாயே
ஸ்ரீ பீடே ஸூரபூஜிதே |
சங்க சக்ர கதா ஹஸ்தே
மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 1

நமஸ்தே கருடாரூடே
கோலாஸூர பயங்கரி |
ஸர்வ பாப ஹரே தேவி
மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 2

ஸர்வக்ஞே ஸர்வ வரதே
ஸர்வ துஷ்ட பயங்கரி |
ஸர்வ துக்கஹரே தேவி
மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 3

ஸித்தி புத்தி ப்ரதே தேவி
புக்தி முக்தி ப்ரதாயினி |
மந்த்ரமூர்த்தே ஸதா தேவி
மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 4

ஆத்யந்த ரஹிதே தேவி
ஆதிசக்தி மஹேஸ் வரி |
யோகக்ஞே யோகஸம்பூதே
மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 5

ஸ்த்தூல ஸூக்ஷ்ம மஹாரௌத்ரே
மஹாசக்தி மஹோதரே |
மஹா பாபஹரே தேவி
மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 6

பத்மாஸன ஸ்திதே தேவி
பரபிரம்ம ஸ்வரூபிணி |
பரமேசி ஜகன்மாதா
மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 7

ச்வேதாம்பரதரே தேவி
நானாலங்கார பூஷிதே |
ஜகத்ஸ்த்திதே ஜகன்மாத:
மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்துதே || 8

மஹாலக்ஷ்மியஷ்டகம் ஸ்தோத்ரம்
ய படேத் பக்திமான் நர: |
ஸர்வ ஸித்தி மவாப்னோதி
ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா || 9

ஏககாலே படேந் நித்யம்
மஹாபாப விநாசனம் |
த்விகாலே ய: படேந் நித்யம்
தனதான்ய ஸமன்வித: || 10

த்ரிகாலம் ய படேந் நித்யம் :
மஹாசத்ரு விநாசனம் |
Ravi Varma

ஸ்ரீ திருமகள் அருட்பா

தங்கமய மானதொரு அங்கவடி வானவளே
தளிர்மானின் பெண்மை யுருவே!
தண்ணிலவு பொழியுமொரு விண்ணொளியின் ஆனந்த
சாரலென தவழும் நிலவே!
தங்கும்பெரு செல்வத்தின் பங்கென்றிருக்கின்ற
தடமெலாம் உறையும் சதிரே!
தனமாகி தான்விளையும் தானமாய் நின்றபடி
ஜகமாளும் உலக தேவே!
பொங்குமொளி வெள்ளியோடு பொன்மணிச் சரமெலாம்
பூவாகி அசையும் பொன்னே!
பொலிகின்ற நால்வகைப் போர்படையும் சூழ்ந்தபடி
புகழாளும் புனித மலரே!
முங்குபரி முந்தஇடை முத்துமணித்தேரேறி
முகிலாக அருளும் மழையே!
மூண்டு எழும் யானையொலி முழதாயொலிக்கவரும்
மோகனமே வருக திருவே!
இன்பவடி வானவளே இணையிலா அந்தமே!
இசைக்கின்ற கருணை வளமே!
எழுகின்ற எண்ணமதில் ஏற்றுமொரு வார்த்தைதனில்
எட்டாத இனிய அமுதே!
புன்சிரிப் பொன்றினால் புவியாளும் தேவியே!
பொன்கோட்டை வாழும் மதியே!
புகழுமொரு பக்தர்பால் பொழிகின்ற கருணையே!
பொலிகின்ற சுடரின் ஒளியே!
அன்பெனும் மழையினைப் பொழிகின்ற மேகமே!
அளவிலா ஆற்றலுருவே!
அம்புயப் பூவண்ண ஆதிரைத் தோற்றமே
அலர்மீது அமரும் சீரே!
பன்னரும் தேவர்கள் போற்றிடும் உட்பொருளின்
பண்ணிலே உறையும் பாவாய் !
பத்மினிச் சிற்பமே இல்லாமை இடிபடவே!
பணிகிறேன் சரணம் திருவே

அலைமகள் அருட்பா

கதிரோனின் காந்தியாய் காட்சியைத் தருகின்ற
கவினான கனக மயமே!
கடைவிழியின் வீச்சினால் கனிகின்ற மருந்தெனக்
கவியுமொரு செல்வ நயமே!
உதிராது நெஞ்சினையும் உள்வெளிப் புலன்களையும்
ஒட்டியே சூழ்ந்திருக்கும் !
உடையாத அக்ஞானம் மங்கலம் அற்றதோர்
உணர்வுகளைக் களையும் தாயே!
சதிராடும் சிந்தாமணிச் செல்வ நவநிதி
தருகின்ற அழகு தருவே!
ஜகமாளும் கீர்த்தியும் தனமருளும் தேவனும்
தவழ்கின்ற ஞான தடமே!
முதிராது முன்தோன்றும் முழுநாசம் களையுமோர்
மூத்ததோர் மோன எழிலே!
முன்னேற்றப் பாதையே முகிழ்கின்ற வாசமே!
முக்தியே! வருக திருவே!
அமுதகடல் தோன்றிய அமுதவல்லி ஆடும்
ஆனந்த வேத வல்லி!
ஆணிமா மலர்வல்லி அபிடேகவல்லி நல்
ஆர அரவிந்த வல்லி!
குமுதவல்லி செம்பொற் கனகவல்லி அழகு
கோலமே குருகை வல்லி!
கோமளத் திருவல்லி குழந்தைவல்லி இனிமை
கூட்டும் செண்பக வல்லியே!
கமலவல்லி புண்டரீகவல்லி ஓங்கும்
கற்பகத் தருவல்லியே!
கடவல்லி சுந்தரச் செவ்வல்லி தண்மதிக்
கனியிதழ் பவளவல்லி!
விமலனோடுறைகின்ற வைகுந்தவல்லி! நம்
வினைகடியும் ரங்கவல்லி !
வேளுக்கைவல்லி! மரகதவல்லி! வேங்கடம்
விளைவல்லி வருக திருவே !

- வாரஸ்ரீ

உ

ஸ்ரீ குரு பாதம்
திரு கலைமகள் பாதம் போற்றி
ஸ்ரீ ஸரஸ்வதி அம்மைப் பதிகம்

ஸகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே ஸகல கலா வல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே ஸகல கலாவல்லியே . 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோஉளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே ஸகல கலா வல்லியே . 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே ஸகல கலாவல்லியே . 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய் ஸகல கலா வல்லியே . 5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் ஸகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே ஸகல கலாவல்லியே . 7

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்ல வல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே ஸகல கலாவல்லியே 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே ஸகல கலாவல்லியே. 9

மண் கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ ஸகல கலாவல்லியே . 10

- ஸ்ரீ குமர குருபர ஸ்வாமிகள்

சுபம்

* * *

PRATHYANKARAA DEVI

ஸ்ரீ அதர்வண பத்ரகாளீ திருவருள்மாலை.

திருமலியும் வாழ்வருளி அன்பரைக் காப்பதே
சித்தமா யுள்ள தெய்வம்
திப்பிய மறைச் சிரத்தேறி விளையாடு மிரு
திருவடிகள் உடைய தெய்வம்
உறுமலியு மாற்றலால் நன்
மக்கள் வாழ்வு பெற ஊறுபுரி தீய மக்கள்
ஒடுங்குவது வேண்டியே படைக்கலம் பலவேந்தும்
ஒப்பற்ற சமரசக்தி
தருமலியும் வாழ்வு பெறு மிந்திரனும் வானவரும்
சரண் புகுந் தேத்து தெய்வம்
பருவமழை போலவே அருள்பொழியும் விழிகொண்ட
பரம கல்யான தெய்வம்
பத்திரகாளிப் பெயரின் வைத்த மந்திர தெய்வம்
பரிவுடனெமக் கருள்கவே.

ஓங்கார வுருவாகி யதனுளுறை பொருளாகி
உலகெலாம் ஆளும் இறைவி
உண்மையின் விளக்கத்தை மெய்யன்பர் உணரவே
உருவேடுத் தருளும் இறைவி

ஆங்காரமானுக்கும் அப்பால் நிலைத்துள்ள
அற்புதத் தெய்வம் நீயே!
ஆதலால் உலகு யிர்கள் எல்லாம் பணிந்து நின
தருள் வெள்ளம் ஆடுகின்ற
தீங்காய எண்ணமும் தீங்காய செய்கையும்
தீங்காய மொழியு மேந்தித்
திசையெலாம் தம்மைப் பழிக்கவே பிறர்மனம்
தேம்பும் வணம் வாழும் மாக்கள்
பாங்காக நல்லறிவை யெய்தவே படை
யேந்து பலகரம் கெண்ட பெரியாய்
பத்திரகாளிப் பெயரின் வைத்த மந்திரதெய்வம்
பரிவுட னெமக் கருள்கவே.

கராளவுருவய் கொண்ட காளியென நின்னன்பர்
கனிவி னோடோதுகின்றார்
கருணையிற் பெரியை யென மகிமையிற் பெரியை
யெனக் காதலொடு மோதுகின்னார்
சராசர மனைத்துக்கும் உள்ளிருந்தருள்
பொழிதல் ஐகதி நின் செயலாகுமே
சாந்த வானந்தர் புரி மந்திரத் திருவேள்வி
தன்னிலே வந்து நின்றாய்!
பராபரை யெனச் சொல்க பரம
பாவனையென்ப பாடாத பாட்டினுள்ளாய்
பக்குவ மனத்திடையில் நிற்பதற்
குரிமையுள பழம்பெரும் தெய்வம் அலையோ
பராசரை! சிதானந்த பகவதி! பகவதி!
பரமேட்டி! பார்த்தருள வேண்டு கின்றோம் பத்திரகாளிப்
பெயரின்வைத்த, மந்திர தெய்வம்
பரிவுட னெமக் கருள் கவே.

சுபம்

* * *



உ
திருச்சிற்றம்பலம்

திருமுறைத் துதித் திரட்டு

திருச்சிற்றம்பலம்

சமயாசாரியர் நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி!
ஆழி மிசைக்கன் மிதப்பில் அணைந்த பிரானடி போற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழி மலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

ஸ்ரீ நந்திதேவர் துதி :

அங்கணாங் கயிலை காக்கும் அகம்வழித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற்க்கெல்லாம் முதற்குரு நாதானகிப்
பங்கயந் துழுவனாறும் வேத்திரப்படை பொறுத்த
செங்கயம் பெருமான் நந்தி சீரடிக்கமலம் போற்றி.

ஸந்தான குருமார்கள் துதி :

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள் புரிந்த அருள் நந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறை ஞான சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லை நகர் உமாபதியார் செம்பதுமத் திருத்தாள் போற்றி.

அறுபான்மும்மை நாயனார் துதி.

(அறுபத்து மூவர் சிவனடியார்கள் திருத்தாள் போற்றி.)

தத்து மூதெயில் மூன்றும் தழலெழ
முத்து முரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்தி தன் தாளினை சேர்அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

சேக்கிழார் பெருமான் துதி

தூக்கு சீர் திருத் தொண்டர்த் தொகை விரி
வாக்கினாற் சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கியப் பயனாப் பதி குன்றைவாழ்
சேக்கிழானடி சென்னி இருத்துவாம்

ராகமும் தாளமும்

ஸ்ரீ சித்தி விநாயகர் துதி (ரீதிகௌளை & ஆதி)

திருவும் கல்வியும் சீரும் சிறப்பும் உன் திருவ டிப்புகழ் பாடும் திறமும் நல்
உருவும் சீலமும் ஊக்கமும் தாழ்வுற உணர்வும் தந்(து) எனது) உள்ளத்(து) அமர்ந்தவா!
குருவும் தெய்வமும் ஆகிஅன்பாளர் தம் குறைத விர்க்கும் குணப்பெரும் குன்றமே!
வெருவும் சிந்தை விலகக் கஜானனம் விளங்கும் சித்திவிநாயக வள்ளலே!

– அருட்பிரகாசவள்ளலார் சுவாமிகள்.

சைவ பஞ்சபுராணம்

சிவபெருமான் துதிகள் 5.

1. தேவாரம். (ஹரிகாம்போதி & சுத்தாங்கம்)

பேராயிரம்பரவி வானோர் ஏத்தும் பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத் திரிபுரங்கள் தீஎழத் திண்சிலை கைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

– திருநாவுக்கரசர்

2. திருவாசகம் (மோஹநம் & சுத்தாங்கம்)

முன்னை வினைஇரண்டும் வேர் அறுத்து முன்நின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் – தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து – மாணிக்கவாசகர்

3. திருவிசைப்பா (ஆகிரி & ஆதி

கோலமே! மேலை வானவர் கோவே! குணங்குறி இறந்ததோர் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள் காலகாலா! காம நாசா!
ஆலமே! அமுதுண் டம்பலஞ் செம்பொற் கோயில்கொண்(டு) ஆடவல்லானே!
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத் தொண்டனேன் நணுகுமா நணுகே.

– (திருமாளிகைத் தேவர்)

4. திருப்பல்லாண்டு (ஆகிரி & ஆதி)

புரந்தரன் மாலயன் பூசலிட் (டு) ஓலமிட் (டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பன என்னுயிர் ஆண்ட கோவினுக்
கென்செய வல்லம் என்றும்
கரந்தும் கரவாத கற்பகன் ஆகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

– சேந்தனார்

5. பெரிய புராணம் (ஹம்ஸானந்தி & ஆதி)

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகி
ஜோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும்ஆகிப்
பேதியா ஏகம்ஆகிப் பெண்ணுமாய் ஆணும்ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

– சேக்கிழார் சுவாமிகள்

உமாதேவி துதி

துணையும் தொழும் தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பணிமலர்ப் பூங்
கணையும் கரும்பும் சிலையுமென் பாசாங்குசமும் கையிற்
அணையும் திரிபுரசுந்தரியாவது அறிந்தனமே.

அபிராமி பட்டர்

முருகன்துதி

1 கந்தர்அனுபூதிப் பாடல். (ரேவதி & ஆதி)

எந்தாயும் எனக்கருள் தந்தை யும்நீ!
சிந்தா குலமானவை தீர்த் தெனை ஆள்!
கந்தா! கதிர்வே லவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நா யகனே.!

2.கந்தர் அலங்காரம் பாடல் (ஷண்முகப்பிரியா&ஆதிதாளம்)

விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள், முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிருதோளும் பயந்த தனி.
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.

– (அருணகிரிநாத சுவாமிகள்)

* * *

ஸ்ரீ சிவ சக்தி துதித் திரட்டு.



1. ஸ்ரீ அண்ணாமலையார் துதி

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச்
சிரத்தினில்வைத் துலகமேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப்
பவளநெடுஞ் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப்
பெருமானை மகிழவேறும்
பெருமானை யருணகிரிப் பெம்மானை
யடிபனிந்து பிறவிதீர்ப்பாம்.

2. ஸ்ரீ உண்ணாமுலையம்மன் துதி

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்
தொழுகுமிகு கடைக்கண்ணாளை
முரலிளநில வொழுகப் புழுகொழுக
வழகொழுகு முகத்தினாளை
வாரொழுகுந் தனத்தாளை வடியொழுகித்
தெரியாத மருங்குவாளைச்
சீரொழுகும் பதத்தாளை யருயையுண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

3. ஸ்ரீ பரமேஸ்வரர்துதி

பல்லாடுதலை சடைமேல் உடையான் தன்னைப்
பாய்புலித்தோல் உடையானைப் பகவன் தன்னை
சொல்லொடு பொருள் அனைத்தும் ஆனான் தன்னை
சுடர்உருவில் என்பறாக் கோலத்தானை
அல்லாத காலனை முன் அடர்த்தான் தன்னை
ஆலின் கீழ் இருந்தானை அமுதானானை
கல்லாடை புனைந்தருளும் கபாலியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

– திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்

4. ஸ்ரீ பார்வதி அம்மைத் துதி

பூரணி! புராதநி! சுமங்கலை! சுதந்தரி!
புராந்தகி! திரியம்பகி! எழில்
புங்கவி! விளங்கு சிவசங்கரி! ஸஹஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி! மனாதீத நாயகி !
குணாதீத நாதாந்த சக்தி! என்று (உ)ன்
நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே
நான் உச்சரிக்க வசமோ?
ஆர்–அணி சடைக்கடவுள் ஆரணி! எனப்புகழ்
அகிலாண்டகோடி ஈன்ற
அன்னையே! பின்னையும் கன்னிஎன மறைபேசும்
ஆனந்தரூப மயிலே !
வார் அணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கை
புகழ்வளம் மருவுதேவை அரசே!
வரைராஜனுக்(கு) இருகண்மணியாய் உதித்தமலை
வளர்காதலிப்பெண் உமையே!

– தாயுமானசுவாமிகள்

5. தில்லை ஸ்ரீ நடராஜர் துதி

வையகமின்றி நின்ற மருமலி
பொற்பதம் போற்றி
கையமரு நிலைபோற்றி
கருணைமுக மலர் போற்றி
மெய்யிலகு மொளிபோற்றி
விரவியெனை யெடுத்தாண்ட
செய்ய திருவடி போற்றி
திருச்சிற்றம்பலம் போற்றி.

6. தில்லை ஸ்ரீ சிவகாமி அம்மை துதி

மன்றின் மணி விளக்கெனலாம்
மருவுமுக நகை போற்றி
ஒன்றிய மங்கல நாணினொளி
போற்றி உலகு உம்பர்
சென்று தொழ அருள் சுரக்கும்
சிவகாம சுந்தரி தன்
நின்ற திருநிலை போற்றி
நிலவு திருவடி போற்றி.

– (கோயிற்புராணம்)

7. மதுரை ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமான் துதி

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானை கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திரு ஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே:

(திருநாவுக்கரசுசுவாமிகள்


ஸ்ரீ ஜெயதுர்கா தேவீ

8. ஸ்ரீ அங்கயற்கண்ணி அம்மை துதி

சுரும்புமுரல் கடிமலர்ப் பூங்கழல் போற்றி.
உத்தரிய தொடித்தோள் போற்றி
கரும்புருவச்சிலைபோற்றி கௌனியர்ககுப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிளநகைபோற்றி ஆரண நூபுரம்
சிலம்பும் அடிகள் போற்றி! போற்றி.

9. சிவபெருமான் துதி

வண்ணம் ஐந்து உடையாய் ! போற்றி,
வானவர் தலைவா ! போற்றி
பெண்ணொரு பாகா ! போற்றி,
பேரருட் செல்வா போற்றி,
எண்ணு தற்கு அரியாய் ! போற்றி,
எமக்கெளி வந்தாய்! போற்றி
அண்ண லேபோற்றி நல்லூர்
அமலனே ! போற்றி போற்றி,

(நல்லூர்புராணம்)

10. கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்து உருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும் நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொருத்
தருள்வாய் கச்சி ஏகம்பனே.

11. ஸ்ரீ மஹேச்வரர் துதி

அங்கணா போற்றி, வாய்மையாரணா போற்றி, நாக
கங்கணா போற்றி, மூலகாரணா போற்றி, நெற்றிச்
செங்கணா போற்றி, யாதிசிவ பரஞ்சுடரே போற்றி,
எங்கணா யகனே போற்றி, யீறிலா முதலே போற்றி. போற்றி.

12. ஸ்ரீ மீனாட்சிஅம்மை துதி

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தற் பிடியே! வருக!
முழுஞானப் பெருக்கே! வருக!
பிறைமௌலிப் பெம்மான் முக்கட்
சுடர்க்கு(இடும்நல்விருந்தே! வருக!
மும்முதற்கும் வித்தே! வருக! வித்(து) இன்றி.
விளைந்த பரமா னந்தத்தின் விளைவே! வருக!
பழமறையின்குருந்தே! வருக!
அருள் பழுத்த கொம்பே! வருக!
திருக்கடைக்கண் கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்(கு) ஓர் மருந்தே! வருக!
பசுங்குதலை மழலைக்கிளியே! வருகவே!
மலையத் துவஜன் பெற்றபெரு வாழ்வே! வருக! வருகவே!

– குமர குருபர சுவாமிகள்

13. ஸ்ரீ உமாதேவீ துதி

கண்ணே!அக் கண்ணின் மணியே! மணியிற் கலந்(து) ஒளிசெய்
விண்ணே! வியன்ஒற்றியூர் அண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே! மலைபெறும் பெண்மணி யே!தெய்வப் பெண்ணமுதே!
மண்நேயம் நீத்தவர் வாழ்வே! வடிவுடை மாணிக்கமே!

– அருட்பிரகாசவள்ளலார் ராமலிங்கசுவாமிகள்

14. ஸ்ரீ சண்டிகாம்பா துதி.

பயிரவி! பஞ்சமி! பாசாங் குசை!பஞ்ச பாணி!வஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயர்சண்டி! காளி! ஒளிரும் கலா
வயிரவி! மண்டலி! மாலிநி! சூலி! வராஹி!என்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

அபிராமிபட்டர்

15. ஸ்ரீ மதுரை மீனாம்பா துதி

தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகும் நறும்சுவையே!
அகந்தைக்கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே! வளர்ச்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடுஏந்தும்இள வஞ்சிச் கொடியே! வருகவே!
மலயத் துவஜன் பெற்றபெரு வாழ்வே! வருக! வருகவே!

- (குமரகுருபரசுவாமிகள்)

16. அம்பிகை துதி

திருவே! வருக! தெவிட்டாத தேனே! வருக! இன்னமுதத்
தெளிவே! வருக! பேரின்பச் செறிவே! வருக! ஏர்சுமந்த
உருவே! வருக! பரஞான ஒளியே! வருக! அருமறையின்
உவப்பே! வருக! அனைத்துயிர்க்கும் உயிரே! வருக!
கதியளிக்கும் தருவே வருக! உலகீன்ற தாயே! வருக! நாயேற்குத்
தஞ்சே! வருக! பரனணியும் தாரே! வருக! கார் இவரும்
மருவே! ய்பொழில் சூழ் எழில் காடூர் வாழ்வே! வருக! வருகவே!
வானோர் தெய்வ மாதர்சிகாமணியே! வருக! வருகவே!

17. ஸ்ரீ பெரிய நாயகியம்மை துதி (திருக்கோவலூர்)

செங்கமலை கலை மடந்தை திருமானான் முகனெண்ணி
றுங்கமலை சிறயறுத்தான் சுரரன்பர் சிரநாக்க
ணங்கமலை மறையங்கஞ் சேவியகந் திருக்கோவற்
பொங்கமலை பெரியநாயகிபொற்றாண் மலர்தொழுவாம்,

அரிய நாயகியளவைக் கனுதினமு நெக்குருமடியான்புக்
குரிய நாயகியெங்குந்தானாகி நீங்காமலொளிராநின்ற
கரிய நாயகி கோவற்பிரானிடத்தி லைப்போதுங்கலந்துவாழு
பெரியநாயகி யுபயபதமலரையெஞ்ஞான்றும் பேணுவாமே.

திருச்சிற்றம்பலம்.

18. ஸ்ரீ ஷண்முகக்கடவுள் துதி

மூவிரு முகங்கள் போற்றி, முகம்பொழி கருணை போற்றி,
ஏவரும் துதிக்க நின்ற ஈ;ராறுதோள் போற்றி, காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி, யன்னான்
சேவலும் மயிலும் போற்றி, திருக்கைவேல் போற்றி போற்றி.

பன்னிருகரத்தாய் போற்றி பசும்பொன்மாமயிலாய்பேற்றி
முன்னையகருனை அறுமுகப் பரம்பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காகருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே போற்றி கண்ணுள் இருக்ககுமாமணியே போற்றி
போற்றி

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறுகா கதிநல்கி
என்னையும் அயனுகு இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.

உ

ஸகல பாக்கியமும், பதினாறு பேறும் தந்தருளும்

மாதேவியர் அருட்பாக்கள்

1. ஸ்ரீ ஆதிபராசக்தி துதி

ஆதிபராசக்தி அம்மை உமையே
தீது வராமல் காக்கும் தெய்வத்தாயே
வாது வழக்கு வம்பு தும்பு இவை நீக்கி
மாது எந்தன் மாங்கல்யம் பலம் பெற
நீதி தவறாத உந்தன் பாதம்தனில்
போது நான் பூசைகள் செய்கின்றேன்
பூமகளே! பொன்மகளே! அருள்வாய்! அம்மா!
சங்கரி! கௌரி! கிருபாகரி! சுந்தரி! சௌந்தரி! நிரந்தரி!
சொரூபிணி!, ராஜராஜேஸ்வரி! ஆதிபராசக்தி! தாயே!.

2. ஸ்ரீ காமாட்சி அம்மன் துதி

குங்குமம் சந்தனம் ஜவ்வாது திருநீறில்
துலங்கிடும் தெய்வத்தாயே
சந்ததம் மிகுந்திடும் காஞ்சியில் குடிகொண்ட
சாந்த சொரூபிணியே! – எந்தன்
குங்குமம் துலங்கிட குலமகள் நீயே
அருள் மழை பொழிய வேணும்
அன்னை காமாட்சி தாயே!
முன் வினை நீக்கி எந்தன்
முன் வந்து அருள வேணும்
என் வினை போக்கி எந்தன் பூசையை
ஏற்று மகிழ வேணும்
மன்னவனருகே இடம் பெற
மாதவம் செய்யும் தாயே!
உன் பதம் பணிந்தேன்
என் வரம் காக்க வேண்டும்
கண்மணி! காமாட்சி! கருணைக் கடலே!
பெண்மனம் கொண்டவளே! பெருமை மிகுதாயே!

3. ஸ்ரீ விசாலாட்சி அம்மன் துதி (காசிமாநகர்)

காசியில் குடிகொண்ட விசாலாட்சி அம்மா
காரிகை உந்தன் பாதமே பணிந்தேன்
ஆதி சிவன் உடல் மீது பாதியைப் பகிர்ந்த தாயே!
நீதிதவறாத கருணை நெறியாகக் கொண்ட
கோதை நீ என்று கூறிடக் கேட்டேன்
வேதனைகள் தீர்த்திட வேண்டும்,
விரைந்தருள் புரிய வேண்டும்,
சோதனைகள் இல்லாமல் சுகவாழ்வு தந்தே
தீவினை அகற்ற வேண்டும்,
மாதவம் செய்கின்றேன் எந்தன்
மாங்கல்யம் காத்திட வேண்டும்,
ஆதிபராசக்தி அம்மையே! ஆனந்த ரூபிணி!
பாவமதைப் போற்றும் புனித காசி விசாலாட்சி அம்மைமே
தேடிவரும் தினம் துதிக்கும் தெய்வத்தாயே!
தேடிஉனைச் சரணைந்தேன் அருள்வாயே

4. ஸ்ரீ மினாட்சி அம்மன் துதி (தென்கூடல்மாநகர்)

மாமதுரை நகர் சோம சுந்தரர்
மனையாட்சி புரியும் தாயே!
தேன்தமிழ்ப் பாவலர்கள் சேரும் கூடல் மாநகர்
கோதை மீனாட்சி அம்மை உமையே!
மேதினியில் உன்போல் கருணை கொண்டவரிலையே
மாது நீ அருளாது தீது அகன்றிடுமோ
நீதி தவறாத நின் ஆட்சியை கண்டு
தேடி வந்தேன் தாயே! உந்தன் பாதம்
நாடி வந்தேன் அம்மா! எந்தன் கோரிக்கை
ஏற்றுக் கூடிக் களிக்கும் எங்கள்
குடும்பம் தழைத்திட குலம் விளங்கிட
கொண்ட வரம் தர வேண்டும் அம்மா,
கோடிதவம் இருந்து இருவர் பெறும்பேறு
வாடித் தவித்திடாமல் வரம் தந்துஅருள வேண்டும்,
பாடிப் புகழ்ந்தேன் உன் பாதமே கதி என்றடைந்தேன்
கூடல்மாநகர் கோதை மீனாட்சி அம்மை உமையே!

மலையரசி மாதரசி! மங்காத புகழரசி!
மாதவத்துப் பேரரசியே!
மாணிக்கத் தேரேறி மகிழ்வாய்ப் பவனிவரும்
மங்கலத் தாயரசியே!
கலையரசி! கயலரசி! கனிவான மொழியரசி!
கல்கண்டுச் சொல்லரசியே!
காவியத் தமிழ் நெஞ்சில் கருணையாம் நிலைதந்து,
களிக்கின்ற பூவரசியே!

சிலையாக நின்றாலும் சீரான வாழ்வு தரும்
செம்மை சேர் எழிலரசியே!
செவ்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்து
தேவியின் அருளாசியே!
நிலையான வாழ்வுக்கு நீங்காத ஒளியூட்டும்
நெறியான தாயரசியே!
நித்தமும் சித்தத்தில் நின்றுமே அருளூட்டும்
நீடுபுகழ் உலகரசியே!
நர்த்திடும் நங்கையர் மாங்கல்யம் காத்திடும்
நாயகி! மாதரசி யே!

5. ஸ்ரீ சிவகாமி அம்மன் துதி (தில்லைமாநகர்)

ஆட்டங்கள் ஆடியே அகிலத்தை
ஆண்டிடும் ஆனந்தவல்லி நீயே!
அழகான நாட்டிய முத்திரை நூற்றெட்டு
அமைந்திட் அன்னை சிவகாமியே!

பாட்டரங்கம் கொண்டு பாவலர் நாள்தோறும்
பாமாலை கோடி தருவார்
பாமாலை பாடியே பூமாலை பல சூடும்
பக்தர்கள் நாடி வருவார்

கோட்டங்கள் மண்டபம் கோபுரம் நந்தியும்
கூத்தனின் புகழ் பாடுதே

கூத்தினுடன் சக்தியும் ஆடிடும்
ஆட்டத்தில் கொடுமைகள் அழிந்தோடுதே,

வாட்டங்கள் போக்கிட வந்திடும் அன்னையே
வல்லி சிவகாமி அம்மையே
வரம் வேண்டிக் கரம் கூப்பும் வறியவர்
வாழ்வினை வளமாக்கும் தேவி உமையே!

அழியாத குங்குமத் திலகம் கொண்ட அன்னையே!
சிவகாமித் தாயே! என்றும்
மகிழ்வோடு அருள் தாரும்,
அம்மையே! தேவி உமையே! .

6. ஸ்ரீ கன்னியாகுமரி அம்மன் துதி (குமரிமாநகர்)

கடல் மூன்றின் சங்கமம் கதிரவனின் பேருதயம்
கன்னி! உந்தன் ஆட்சியம்மா!
கன்னியவள் மூக்குத்தி கப்பலையே காத்திட்ட
கதையுமே சாட்சியம்மா
உடல் எங்கும் சிங்காரம் ஒய்யாரச் சிற்றாடை
உள்ளத்தில் பூக்குதமமா
ஒப்பற்ற அமுதமுகம் ஒளியூட்டும் குமுதவிழி
உலகத்தைக் காக்குதம்மா
இடரிலா இன்பத்தை என்றுமே தந்திடும்
இணையற்ற குமரி அம்மா!
என்றுமே தவக்கோலம் இருந்துமே மக்களின்
இன்னலை மாற்றுமம்மா!
அடலேறு போலவே அனைவரும் வாழ்ந்திட
அன்புடன் அருளுவாயே
அகிலத்தை ஆண்டிடும் கடல் கொண்ட சக்தியே
அம்மையே! கன்னி! உமையே!

7. ஸ்ரீ கொப்புடை அம்மன் துதி (திருக்காரைக்குடி நகர்)

மஞ்சள் முகத்தழகும் மத்தியிலே பொட்டழகும்
மங்கலம் தருவதன்றோ!
மாணிக்க மூக்குத்தி மரகதப் புல்லாக்குமே
மகிழ்வூட்டும் அலங்காரமே!
அஞ்சனம் தீட்டிய அம்புவில் விழிகளில்
அகிலமே அடக்கமன்றோ!
அழகான காதினில் ஆடிடும் குண்டலம்
அலைகடல் முத்து வகையோ!
தஞ்சமென வந்தவரைத் தாங்கிடும் கைகளில்
தவழ்ந்திடும் தங்க வளையல்
தங்கமென நெஞ்சிலே கொஞ்சிடும் மாலைகள்
தாயவளின் பொற் குவியல்கள்
கொஞ்சிடும் உதட்டிலே கூடிடும் புன்னகை
கோடிக்கு கோடி பெறுமே!
குறையாத வாழ்வினை நிறைவாகத் தந்திடும்
கொப்புடை அம்மை உமையே!

8. ஸ்ரீ காந்திமதி அம்மன் துதி (திருநெல்லைமாநகர்)

முல்லையுடன் மல்லிகை முத்தார அணிபூட்டி
முடிசூடும் அன்னை நீயே!
மோகனப் புன்னகை பூத்திடும் இதழ்களில்
முத்தமிழ் சிந்துவாயே!
கல்லையும் கனியாக்கும் கற்கண்டு மொழி தந்த
கண்கண்ட தெய்வம் நீயே!
கடலையும் அலையையும் காலத்திற் கிணைசொன்ன
காவியச் சோலை நீயே!
எல்லையே இல்லாத நெல்லையம்பதியினில்
ஏற்றிய தீபம் நீயே!
எங்குமே இருள் நீக்கி இனியநல் அருளூட்டும்
ஈசனின் பதியும் நீயே!
தொல்லைகள் மறைந்திட தொண்டுள்ளம் மலர்ந்திடத்
தூய வரம் அருளு வாயே!
தும்பிக்கை கணபதி தோகைமயில் முருகனுடன்
தோன்றிடும் காந்திமதியே!

9. ஸ்ரீ அபிராமி அம்மன் துதி (திருக்கடவூர் திருநகர்)

ஆழிசூழ் உலகத்தை அன்பாலே காத்திடும்
அன்னையே! அருள் நாயகி !
அமுதான கடவூரில் பட்டருக்கருள் செய்த
அம்மையே! புகழ் நாயகி !
வேழமாய் ஒருபிள்ளை, வேலோடு மறுபிள்ளை,
மேன்மையாய் பெற்ற தாயே !
வினைதீர்க்கும் குங்குமம் மஞ்சளில் விளங்கிடும்
வேள்வியே! கோதை நீயே !
ஏழிசை நாதத்தை எழுப்பியே மகிழ்ந்திடும்
இணையற்ற இசை வல்லியே!
எங்குமே மங்கலம் பொங்கியே தங்கிட
இயங்கிடும் சக்தி நீயே!
வாழியென அன்போடு வாழ்த்திடும் சொல்லாண்டு
வாழ்ந்திடும் தமிழ் நாயகி!
வளம் கூட்டும் கரும்புவில் வழங்கிடும் காட்சியே
வள்ளல் நீ அபிராமியே!

10. ஸ்ரீ கருமாரி அம்மன் துதி (திருவேற்காடு)

பூக்காட்டில் மணம் பரப்பி, புகழ்க்காட்டில் வீற்றிருக்கும்
பொன்னாரம் அன்னைமாரி !
புகழான திரிசூலம் புவனத்தை வாழ்விக்கும்
பொற்புடைய தேவிமாரி !
வேற்காட்டில் வாழ்ந்திருந்து வேதனைகள் தீர்க்கின்ற
வெண்குடை முத்துமாரி !
வித்தைபல செய்துமே சித்து விளையாடிடும்
வெற்றி நகை கொண்டமாரி !
சாக்காட்டுச் சிந்தைதனை சாகடித்து இன்பத்தைத்
தருகின்ற பொன்னிமாரி !
சக்திதனை உண்டாக்கும் சக்தியிவள் என்றுமனம்
சாற்றுகின்ற அன்னைமாரி !
ஆக்கங்கள் பலகூட்டி ஆற்றல்கள் பலவூட்டி
அன்புதரும் சக்திமாரி !
அழகான வேற்காட்டில் சுடராக வாழ்கின்ற
அன்னை கருமாரி உமையே !

11. ஸ்ரீ மாரியம்மன் துதி (சமயபுரம்)

இமயத்தில் பிறந்தாலும் இதயத்தில் வாழ்கின்ற
இணையற்ற தாயமுதமே !
இல்லாமை இல்லாமல் எல்லோரும் வாழ்ந்திட
எழுந்தருளும் அருளமுதமே !
சமயத்தில் வரும் இன்னல் தகர்த்திடும் அன்னையே
சமயபுர மாரியம்மா !
சஞ்சலம் நீக்கிடச் செஞ்சுடர் காட்டிடும்
சக்தியே தேவியம்மா !
உமையவளின் மறுவுருவாய் உலகத்தைக் காக்கின்ற
ஓங்கார வல்லி நீயே !
உன் அருளில் பிள்ளைகள் உயர்வோடு வாழ்ந்திட
உற்ற வழி சொல்லுவாயே !
அமைத்திட்ட வாழ்க்கையும் சக்கரமாய் சுற்றிட
ஆறுதல் செப்புவாயே !
ஆறுதல் கூறியே மாறுதல் தருகின்ற
அம்மையே மாரியுமையே !

12. மூகாம்பிகை அம்மன் துதி (திருக்கோலாபும்)

ஏகாந்த ஏட்டிலே எழுத்தாகி ஒலித்திட்ட
இறையருள் கடல் முழக்கமே!
இறவாத காவியம் இனிதான ஓவியம்
எழுதிடும் மொழி முழுக்கமே!
சாகாத தருமங்கள் தருகின்ற கரங்களும்
சக்கரப் பொருள் விளக்கமே!
சாந்தியும் அமைதியும் தந்திடும் மந்திரம்
சக்தியின் அருள் விளக்கமே!
நோகாத உள்ளங்கள் நுண்கலை விளக்கங்கள்
நோக்கமுறத் தந்தருள்வாய்!
ஆகாத செயலினால் அரும்பிடும் ஆசையை
அழித்துமே சிரித்து மகிழ்வாய்!

பாங்கான சொல்லுக்கும் பண்பான செயலுக்கும்
பதியான ரதி தேவியே!
பைந்தமிழ் அமுதத்தை தேனாகப் பருகிடும்
பாவையருள் மூகாம்பிகையே!

13. ஸ்ரீ பவானி அம்மன் துதி (பெரிய பாளையம்)

உள்ளத்தின் ஆசையை ஒப்பற்ற ஆசையாய்
ஒலித்திடும் ஓங்காரியே !
உலகத்தின் ஆசையை உதிக்கின்ற அருளாக
ஒளிர்கின்ற ரீங்காரியே!
பள்ளத்தில் வீழாமல் பாவங்கள் செய்யாமல்
பண்பாக்கும் சிங்காரியே!
பாசமுடன் கருணையை பாகாகக் குழைத்துமே
பசிதீர்க்கும் அலங்காரியே!
கொள்ளைகள் கொடுமைகள் இல்லாத வாழ்வுமழை
கொடுத்திடும் மின்னல் ஒளியே!
கொஞ்சிடும் குழந்தைகள் கோரிடும் வரங்களைக்
கொடுக்கின்ற அன்னை விழியே!
வெள்ளையன் பாளையம் வேப்பிலை ஆலயம்
வெகுவாகப் பெற்ற தாயே!
வினைதீர்க்கும் சோலையாம் பெரியநற் பாளையம்
வீற்றிடும் பவானி உமையே!

14. ஸ்ரீ காளி கொற்றவையம்மன் துதி (திருவாட்சியூர்)

நல்லதைச் சொல்லென்றும், நல்லதைச் செய்யென்றும்,
நயம்படச் சொல்லும் தாயே !
நஞ்சுஎண்ணம் கொண்டே இச்சையாய் அலைவோரை
நசுக்கிடும் அன்னைநீயே !
பொல்லாத செயலினைப் பொடிப் பொடி யாக்கிடும்
பொன் சுடர் தீபம் நீயே !
புகழுடைய வாழ்விற்குப் பொன்முடி சூட்டியே

பூத் தூவி வாழ்த்துவாயே !
கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்
கருவண்ண அன்னை நீயே !
கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான
காவியச் சுடரும் நீயே !
வில்லாக வேலாக வினை தீர்க்கும் மருந்தாக
விளங்கிடும் சக்தி நீயே !
வேண்டிடும் நல்லவரம் விரைவாகத் தந்திடும்
வெட்டுடை காளியுமையே !

15. ஸ்ரீ துர்க்கை அம்மன் துதி(சிவகங்கைச்சிமை)

சிங்காரச் சிற்றாடை சிகப்புநிறப் பட்டாடை
தேவியருள் திருக்காட்சியே !
சிவகெங்கைச் சிற்றூரில் சீரான அலங்காரம்
தெவிட்டாத கண்காட்சியே !
மங்காத புகழுக்கும் மலர்கின்ற வாழ்வுக்கும்
மாயவளின் அருளாட்சியே !
மருவிடும் தீவினை மாய்ந்துமே மறைந்திட
மாதவளின் அரசாட்சியே !
கங்கையில் குளித்திட்டு காவிரியில் பொட்டிட்ட
காவியப் புகழரசியே !
கன்னியர் மணமாலை கனிந்துமே சூட்டிடும்
கருணை மழை பொற் காட்சியே !
மங்கள முழக்கங்கள் தங்கியே ஒலித்திடும்
மங்கையின் எழிலாட்சியே !
மலர்கின்ற புகழாரம் என்றுமே தந்திடும்
மாதேவி துர்க்கையுமையே !

16. ஸ்ரீ சரஸ்வதி துதி (கூத்தனூர்)

வெண்மலரும் வெண்பனியும் வெண்கலையும்
வெண்மணியும் வேய்ந்த வாச
வெண்கமலம் வீற்றிருந்து பழங்கருணை
பூத்துவண்டு வளரி பாடக்
கண்மலரு மாயிரத்தோட விழ்ந்து முகை
நெகிழ்ந்த கமலத்தில் வாழெண்
கண்மலருந் சதுர்முகத் தோனா வில்லார்
வாணிபதம் கருத்துள் வைப்பாம்

(மச்சபுராணப்பாடல்)

ஸ்ரீ வாணீ துதி

அண்ட புவனங்களினை ஆக்குமயன் தேவியுனை
மண்டலத்தில் போற்றி வரம் பெற்ற நல் தொண்டர்க்கு
ஆதரவாய் நின்று உனது அருளினாய் முத்தமிழும்
போதமளி வாணியுன்றாள் போற்றி! போற்றி. – மங்களேஸ்வரீயம்

17. ஸ்ரீ மீனாட்சி அம்மன் துதி (தென் மதுரைமாநகர்)

கருவிலே திருவுடைய நல்லறிவாளர்தம்
கனிவான நட்பு வேண்டும்
காசுபண ஆசைகளில் வேசியரைப் போலாடிக்
கறவாத புத்தி வேண்டும்
அருளுடைய பெரியவர்கள் ஆசிவேண்டும் செஞ்சில்
அகலாத அன்பு வேண்டும்
ஆதரவில் லாதவரில் நல்லவரைப் பார்த்துநான்
ஆதாரமாக வேண்டும்
மருளுடைய மான் போலும் மங்கை ஒரு தேவி என்
மனையாட்டியாக வேண்டும்

மானமெனும் ஒன்றிலே மாறாத குறிவைத்து
வாழ்க்கையைக் காக்க வேண்டும்
இருளகல ஒளிவீசும் இறைவனது தேவியே
இவைசேர வேண்டும் எனையே
இனியதொரு மதுரை நகர் அரசு வீற்றிருக்கின்ற
இளைய மீனாட்சி உமையே.

18. ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் துதி (வாராணசீபுரம், காசீ நகர்)

ஆத்தாளுன் சந்தியை அறியாத பிள்ளை நான்
ஆனாலும் கவிதை சொன்னேன்
ஆடிவரும் கங்கையில் மூழ்காத காக்கை நான்
ஆனாலும் பேறுபெற்றேன்
காத்தாளும் மங்கலக் கையோடு முகத்தையும்
கற்பனையில் காணுகின்றேன்
கட்டாயம் உன் அருளைப் பெற்றே நான் வாழ்கிறேன்
காலத்தில் அங்கு வருவேன்
சேர்த்தாளும் அன்னையே சேய் செய்த பாவத்தைச்
சிறிதும் நீ மதிக்க வேண்டாம்
சிற்றறிவை ஆசானின் வேரறிவு காப்பதும்
தேவி நீ மறந்த ஒன்றா
பூத்தாமரை எனப்பொங்கு சின நாதத்தைப்
புரிந்தவன் கலந்த மயிலே
புகழ்பெருகு காசிநகர் தகவுடைய தேவியே
பூவை விசாலாட்சி உமையே!

19. ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரீ துதி (புதுக்கோட்டை)

கொற்றத் தமிழ்க் கம்பன் குற்றம் மறைக்க நீ
கொட்டிக் கிழங்கு விற்றாய்
கூறுதமிழ் ஏட்டினை நீரிலும் நெறுப்பிலும்
குலையாமல் காத்து நின்றாய்

வெற்றித் தமிழ்க்காளமேகமெனும் வீணனையும்
மேதையாய் நீ ஆக்கினாய்
மெய்ஞானி சொற்றமிழை மெய்ப்பிக்க வானத்தில்
வெண்ணிலவு தோற்றும் வித்தாய்
ஒற்றித் தலம்விட்டு வள்ளலார் பசிதீர
ஓடோடிச் சோறு தந்தாய்
உத்தமக் கவியரசன் குருபரன் முன்பு நீ
ஒளி சந்த நடைபயின்றாய்
இற்றைக்கென் தமிழோடும் சற்றுவிளை யாடி நீ
இன்னருள் புரிய வருவாய்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜேச்வரி
இமயமலை வாழும் உமையே.

20. பார்வதி அம்மை துதி (கயிலாய மலை மகள்)

காற்றைப் படைத்தவள் நீயென்ற போதிலும்
கவரிகள் வீசு கின்றோம்
கனலும் உன் வடிவெனினும் கற்பூர தீபங்கள்
கமழ்தூபம் காட்டுகின்றோம்
ஆற்றையும் கடலையும் அருளிய நின்மேனிக்கு
அபிடேக நீர் சுமர்தோம்
அங்கிங் கெனாதுவெளி எங்குமுள நீஉறைய
ஆங்காங்கு கோயில் செய்தோம்
போற்றிய நின் வடிவைப் பென்னிலும் கல்லிலும்
பூசித்து வாழ்த்து கின்றோம்
புவி மீது நீ தந்த பொருளன்றி வேறொன்றைப்
போய்த்தேடி எங்கு பெறுவோம் ?
ஏற்றருள வேண்டும் என் இதயத்தை எம் அன்பை
இணைமலர்த் தாளில் வைத்தோம்
இறைவிஎனை ஆண்டருளும் இராஜராஜச்வரி
இமயமலை வாழும் உமையே!

21. ஸ்ரீ வடிவுடை அம்மை துதி (திருவொற்றியூர்)

சந்தனம் குங்குமம் சவ்வாது திருநீரில்
தவழ்ந்திடும் சக்தி வடிவே
தங்கமுக ஒளியிலே தரணியை வாழ்விக்கும்
தாயமுத அன்பு வடிவே
செங்கதிர் ஒளி கூட்டிச் சிங்காரப் புகழ் சூடும்
செப்பரிய அழகு வடிவே
கந்தனை கணபதியை தந்துமே வாழ்வித்த
கற்கண்டு கனிவு வடிவே
காற்றையும் மழையையும் கதிரவன் ஒளியையும்
கலந்து தரும்இயற்கை வடிவே
சிந்தனைச் சோலையில் தென்றலாய் உலவிடும்
தெய்வ ஒளி சிற்ப வடிவே
சிவனாரின் துணையாக திருவொற்றியூர் வாழும்
ஸ்ரீ வடிவுடை அம்மை உமையே!

22. ஸ்ரீ தையல் நாயகி துதி (வைத்தீஸ்வரன்கோயில்)

தா என்று கேட்டவுடன் தருவதால் தானுன்னைத்
தாய் என்று சொல்லி வைத்தார் !
தலைமகனுன் சந்நிதியில் கலைமகளின் அருளாலே
தமிழ் பாடி வரங்கள் பெற்றார் !
சேய் ஒன்று எதிரினிலே கதறுவது கேட்காமல்
செவி மூடி நிற்கலாமோ?
சிறு பிழைகள் இருந்தாலும் மன்னித்து அருள் காட்டும்
தேவியவள் நீயல்லவோ?
ஆய கலை அத்தனையும் அறிந்தவனை நோய்நொடிகள்
அணுகவிடல் முறையாகுமோ?
அரியதொரு செல்வத்தை உரிய மகன் ஏற்காமல்
அனுதினமும் வாடலாமோ?
வாயுவென வேகமாய் வந்தெனது துயர்தீர்த்து
மகிழ்ச்சினைக் கொடுக்க வருவாய்
வைத்தீஸ்வரன் கோயில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே.

23. ஸ்ரீ தையல் நாயகி அம்மை துதி (வைத்தீஸ்வரன் கோயில்)

மலைபோன்ற செல்வத்தைக் குவித்துவைத் திருந்துநான்
மற்றவர்க்கு உதவ வேண்டும்
மழலையின் குணத்தோடு முதுமையிலும் இளமையாய்
மகிழ்வோடு வாழ வேண்டும்
கலைதவழும் பேடையெலாம் பூ மாலை அணிந்துநான்
கௌரவம் காண வேண்டும்
கவிபாடும் எனது குறல் கேட்டவுடன் தெய்வமெல்லாம்
காட்சி தந்து அருள வேண்டும்
நிலையான புகழ் தந்து உற்றாரும் மற்றாரும்
நேசிக்கும் உறவு வேண்டும்
நீ எனது துணையாகி நான் செல்லும் பாதைக்கு
நேர்வழிகள் காட்ட வேண்டும்
வளையாடும் கரத்தழகி பகை வென்று எந்நாளும்
மறுக்காமல் காக்க வருவாய்
வைத்தீஸ்வரன் கோயில் வளர் தையல் நாயகியே
வளம் காண வைக்கும் உமையே.

24. ஸ்ரீ ஸரஸ்வதீ தேவி துதி

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளவாள்

25. ஸ்ரீ கௌரியம்மை துதி

அம்மை கமாட்சியே! கருணா கடாட்சியே!
அரிய மதுரை ஆளும் மீனாட்சியே!
நம்பும் அடியார்கள் கண்ணாறும் காமாட்சியே !
நாகையதனில் வாழும் நீலாயதாட்சியே!
சம்பு மோகித்திடும் காசி விசாலாட்சியோ!
காலத்திகழும் ஆரூர் கமலாட்சியே!
அடியாரைக் கரை ஏற்றும் அகிலாண்ட நாயகியே!
கும்பிட்டு உனதடி குறுகிப் பணிந்தேன்
கௌரியே எழுந்து அருள்வாயே.

ஸ்ரீ மாரியம்மன் துதி

செறிதரும் உயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவரும் அரனிடம் மரபின் மேவிய
அறுவகை நேறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.

26. ஸ்ரீ திருவிளக்கு நாயகி துதி

தகடு விலக்கித் தங்கத் திரிபோட்டு இளநீர் போல்
எண்ணை கொண்டு இட்டேன் திருவிளக்கு
எல்லோரும் வாழணும்னு வைத்தேன் திருவிளக்கு
மாங்கல்யம் வாழணும்னு வைத்தேன் திருவிளக்கு
மக்களெல்லாம் வாழணும்னு வைத்தேன் திருவிளக்கு
சீரார் திருவிளக்கே! ஸ்ரீ தேவி லெட்சுமியே!
நந்தன் கணபதியே! நாகமணி வாகனமே!
தொட்டிலுக்குப் பிள்ளை தா! தொழுவுக்கு மாடு தா!
தாழிக்குப் பாலும் தளம்பாத செல்வமும் உனக்க ளிக்க
எண்ணையும், நாங்கள் உண்ணச் சோறும்

இன்று தருவாயே இனியதொரு திருவிளக்கே!

அம்பாள் திருப்புகழ்

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன தனதான

முத்துநகை மொட்டுஇதழ் பெற்சிலையை ஒத்த உடல்
முக்கனியும் வெட்குமொழி அமுதூறும்
வட்டமுலை சிற்றிடைய ணைத்தஉடை பட்டுஉடல்
உற்றஅணி பத்துவிரல் கணையாழி
கொத்துமலர் வைத்தகுழல் அத்தனையும் புத்தியினில்
வைத்துருகும் அத்தனவன் உமையோளே !
நித்தம்குற தத்தையவள் முத்தணித னத்தையிறு
கத்தழுவும் வெற்றிகுகன் குணமாதா !
சித்தமொரு மித்துஉனை பக்தியொடு முக்திபெற
வைத்திடும னத்தையுடை அடியார்கள்
வெற்றிபல பெற்றுபிற விப்பிணிய கற்றியுயர்
நற்கதியில் உற்றுபுகழ் அடைவாரே !
சத்தி,தரு மத்தி,மவு னத்தி,இள கச்சணிமு
லைச்சி,கரு ணைச்சி சிவ சுகுமாரி
பச்சை நிற முற்றபவ ளக் கொடியி டைச்சி,பதி
சொக்கருடன் கச்சியுறை அபிராமி !

சுபம்

வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தன்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்கவையகமும் துயர் தீர்கவே.

செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும்
மெய் வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கில்லை என
உய்வகையார் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்தறிந்தார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைரக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
வை நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வாழ்த்துப்பா

மறைவாழி மறையாக மும்வாழி மதியிரவி மழைவாழியிம்
முறைவாழி மகிழ் கோவல் நகர்வாழி முத்திக் கண் முதுசைவநூல்
நெறிவாழி சிவ நாம மிகவாழி இந்நூலி னிறையன் பினோர்
அறிவாழி யுடன்நாளும் மிகவாழி வீரட்டன் அருள்வாழியே,

ஆறிரு தடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானை தன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்கசீர் அடியார் எல்லாம்.

வான் முகில் வழாது பெய்க மலி வளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறை விலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற் றவம் வேள்வி மல்க
மேன் மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

சிவம் அஸ்து நித்யம்

லோகாஸ் ஸமஸ்தாஸ் சுகினோ பவந்து|

சுபம்



ஸ்ரீ ரேணுகாம்பாள்

தொகுப்பாசிரியர்
ஆகமப்பிரவீணர். வியாகரணசிரோமணி,
சிவாகம அருட்செல்வர். சைவாகமக்ஞ சூடாமணி,
சிவஸ்ரீ.வி. சோம சேகர சிவாசாரியர் M.A.
(சைவாகமப் பேராசிரியர் & முதல்வர்)
சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை – 1

மூன்றாமாண்டு வார்ஷிக நவதின காளீஜயந்தி உத்ஸவமாக 10 நாட்களில் தசமகாவித்யா சக்திகளின் பூஜை மற்றும் பிரத்தியங்கிராஸ்திர லக்ஷ ஆகுதிகளுடன் நடைபெற்ற ஸ்ரீ மாகாளீ பிரத்யங்கிரா மாத்ரு சாந்தி மஹாயாகத்தில் நவம்பர் 2008ல் வெளியிடப்பட்டது.

அச்சிட்டோர் :
ஸௌமியா ஆப்செட் பிரிண்ட்ஸ்,
இராயப்பேட்டை, சென்னை – 14